JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

# ஜீவ மன்னா

அனுதினமும்

2014 ஜனவரி

## இயேசுவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்;...

-சங்கீதம் 65:11-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இயேசுவின் அற்புத கிரியைகள்

## 10 வருட சரும நோயிலிருந்து விடுதலை



Y.A. நிமேஷா சந்தமாலி
கலவான

எனக்கு 5 வயதாக இருக்கும் போது சரீரம் முழுவதும் ஒவ்வாமை தடிப்புகள் ஏற்பட்டது. பின்பு சில இடங்களில் தடிப்புகள் வெடித்து சீழ் வடியத் தொடங்கியது. மற்ற இடங்களில் உள்ள தடிப்புகள் காய்ந்து மேற் தோல் கழன்று விட்டது. இது சரீரம் முழுவதுமாக காணப்பட்டமையால் எனக்கு பாடசாலை செல்ல முடியவில்லை. ஆயுர்வேத வைத்திய பரிகாரம் 6 வருடங்களும் ஆங்கில வைத்திய பரிகாரம் 4 வருடங்களும் செய்தும் எவ்வித சுகமும் கிடைக்கவில்லை. சுமார் 3.0000 ரூபாய் பணம் செலவழித்து, அநேக சமய சம்பந்தமான வழிபாடுகள் செய்து எந்தவித சுகமும் கிடைக்கவில்லை.

ஒரு நாள் எனது தாய் என் துயரத்திற்கு பதில் எங்கே? என்ற *C.D.* தட்டு ஒன்று கிடைக்கப் பெற்று நான் எனது தாயாருடன் சனிக்கிழமை ஆராதனையில் கலந்து கொண்ட மூன்றாவது வாரம் போதகர் பயங்கரமான தோல் வியாதியில் கஷ்டப்படும் ஒருவர் இருக்கின்றீர்கள், சம்பந்தப்பட்டவர்கள் முன்னே வாருங்கள் என தேவ வெளிப்படுத்தல் கூறி முன் அழைத்து ஜெபித்தார் அந்நிமிடமே என் சரீரத்தில் ஒரு விடுதலை உணர்வு ஏற்பட்டதோடு சுகம் கிடைத்தது. ஜெபத்திற்கு பின்னதாக 10 வருட சரும நோய் நீங்கி சம்பூரணமாகக் குணமடைந்தேன். என்னை குணமாக்கிய ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவுக்கே என் முழு உள்ளத்தோடு நன்றி கூறுகின்றேன்.

## 5 வருட தலைவலியும் 7 வருட வயிற்று வலியும் சுகம்



திலுஷா காரியவசம்
எல்பிடிய

5 வருடக் காலமாக எனக்கு இருந்த தலை வலியினால் வேதனைப்பட்டேன். வெயிலில் செல்லும் போது மூன்று நாள் அவ்வேதனை தொடர்ந்து இருப்பதோடு அந்நாட்களில் வீட்டு வேலைகள் செய்ய முடியாது. வைத்திய பரிகாரம் செய்வதற்காக வைத்தியரிடம் சென்ற போது எனக்கு "ஞாயிற்றடிப்பு" என்ற நோய் ஏற்பட்டுள்ளதாகவும் (சூரிய வெப்பத்தின் தாக்கத்தினால் ஏற்படும் தலைவலி) எனக் கூறினார். தொடர்ந்து வைத்திய பரிகாரம் பெற வேண்டும் என்று கூறினார். இந்த நோயோடு கூட 7 வருடங்களாகத் தொடர்ந்து அதிக வயிற்றுவலியால் வேதனைப்பட்டேன். வயிற்றுவலிக்காவும் வைத்திய பரிகாரம் பெற்றுக் கொண்டேன். அது தற்காலிகமாக சுகத்தை கொடுத்ததேயன்றி நிரந்தரமான சுகம் கிடைக்கவில்லை.

என்னுடைய அம்மாவின் மூலமாக சுகமளிக்கும் ஆராதனையைக் குறித்து அறிந்து சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனையில் முதன் முதலாகக் கலந்துக் கொண்ட பின் எனது தீராத தலைவலி சுகமானதோடு, இரண்டாவது சனிக்கிழமை கலந்துக் கொண்ட பின் வயிற்றுவலி நீங்கி சுகம் பெற்றுக் கொண்டேன்.

சுகமளிக்கும் ஆராதனையில் இரண்டு சனிக்கிழமை கலந்துக் கொண்டேன். 5 வருடங்கள் தீராத தலை வலியும், 7 வருடங்கள் வயிற்றுவலியின் வேதனை நீங்கி சுகத்தை பெற்று இப்பொழுது 6 வருடங்களாக சுகதேகியாக வாழ்கின்றேன். என்னைக் குணமாக்கிய இயேசுவுக்கு வாழ் நாள் முழுவதும் நன்றி கடன்பட்டுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமை இயேசு ராஜனுக்கே

## ஆசிரியர் உரை

**தேவ பிள்ளைகளே,**

**2014ம் வருடத்தில் ஆகாயத் தாரகையாக மிளிர்கின்ற ஜீவ மன்னா!**

ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் கிடைக்கப் பெற்ற "2014" புது வருடமானது உங்களுக்கு மகிழ்ச்சிகரமான நல் வருடமாக வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன். ஜீவ மன்னா தின தியானங்கள் 28வது வெளியீடு இவ்வண்ணமாக உங்களுக்கு தொகுத்தளிப்பதற்கு எங்களுக்கு அநுக்கிரகம் பெற்றுக் கொடுத்த சர்வ வல்லமையான தேவ பிதாவுக்கே எங்கள் முழு மகிமையையும், கௌரவத்தையும், ஸ்தோத்திரங்களையும் செலுத்துகின்றோம்.

தேவ பிள்ளைகளே! பணம் சம்பாதிப்பது என் நோக்கமல்ல. எனது சொந்த வாழ்க்கையின் முன்னேற்றத்தையும் பிரதி பலன்களையும், நினையாமல் என் தேவனின் இராஜ்யத்தைக் குறித்து பாரத்தோடு மாத்திரமல்ல, உற்சாகத்தோடும் என்னை அர்ப்பணித்தும் என்னுடைய ஓட்டத்தை நான் ஓடுகின்றேன். ஆகையால் எங்கள் தேவ சபையானது எதிலும் குறைவுபடாது ஆத்மீக காரியங்களில் தேவ சபைகளுக்கு இரண்டாவதாக இல்லாதவாறு தேவன் எங்களுடைய தேவ சபையை உயர்த்தி வைத்திருக்கின்றார். அதன் முழு மகிமையும் கௌரவமும் தேவனுக்கே உரித்தாகட்டும். இப்போதும் ஜீவ மன்னா வாசகர்கள் பெரும்பாலானோர் எங்கள் தியானங்களை பெற்றுக் கொள்கின்றார்கள். இதன் மூலம் தினந்தோறும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அத்தோடு வாழ்வில் முன்னேற்றம் ஆகியவைகளை பெற்றுக் கொள்வதனால், எங்கள் கரங்களுக்கு கிடைக்கும் வாழ்த்து மடல்கள் மூலமாக எங்கள் வெளியீடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்ல எங்களுக்கு பெலனும் தைரியமும் உண்டாகின்றது. அவர்களைக் குறித்து ஆவிக்குரிய ரீதியில் மகிழ்ச்சியடைகிறேன்.

அன்பார்ந்தவர்களே! இதுவரை தின மன்னா தயாரிப்பதற்காக உங்கள் ஜெபத்தில் ஒத்தாசை செய்துவரும் அனைவருக்கும், இயன்றவாறு எமது சுமையை தாங்கும் வண்ணமாக வாசகக்கட்டணங்கள் (குறித்த காலத்தில்), சந்தோஷமாகக் கொடுக்கும் காணிக்கைகள் இவைகளைக் கொடுத்து எமக்கு உதவிய அனைவருக்கும் பிறந்த புதிய வருடத்தில் இல்லாமை அவர்கள் வாழ்வில் இல்லாதவாறும் அவர்கள் வாழ்வில் முன்னேற்றத்திற்கு விரோதமான எல்லாத் தடைகளும் நீக்கப்பட்டும் அவர்களுக்கு இரக்கத்தின் ஐஸ்வரியவானாகிய தேவனுடைய இரக்கம் கிடைப்பதோடு தேவ கிருபை அவர்களை சூழ்ந்துக் கொள்ளும்படியாகவும், முழு உள்ளத்தோடு பிரார்த்திக்கின்றேன். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இவ்வருடம் வெற்றிகரமான வருடமாகட்டும்.

**ஆவிக்குரிய மனிதர்களே!**
**ஆத்மீகத்தில் இன்னும் உயர்ந்திட!**
**ஆகாயத்தாரகையாய் மிளிர்ந்திட!**
**ஆவலாய் நுகர்ந்திடுங்கள் ஜீவ மன்னாவை!**

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவுக்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
**இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்**

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி 01 புதன்

புதிய வருடத்தில் புதிய ஆரம்பம் உங்கள் வாழ்வில் உருவாகட்டும்!

இன்றைய வேதவாசிப்பு

யோபு அதி: 13 – 14

**"...என்னிடத்தில் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அப்பொழுது நான் உங்களிடத்துக்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்."** (சகரியா 1:3)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களுக்கு பிறந்த இவ் வருடமானது புதிய பாதைகளைத் திறந்து அதில் அதிசயவண்ணமாக வழி நடத்தும் வருடமாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** இலங்கையர்களில் அநேகர் வழமையாக **சம்பிரதாய சடங்குகளை** நடத்தி வருடத்தை ஆரம்பிப்பார்கள். ஆனால் ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளான நீங்கள் ஒவ்வொருவரும் இன்றும் தேவ **பாதத்தில்** அமர்ந்து அவரை **தொழுது கொள்வதோடு,** அவரின் **ஆலோசனைகளை** இவ்வருடம் முழுவதும் **தரும்படியாகவும் ஆசீர்வதிக்கும்படியாகவும்** ஜெபிக்கின்றீர்கள் என்பதை நான் அறிவேன்.

தேவ பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் தேவ பிதாவின் **சிருஷ்டிப்பின்** பிள்ளைகள் என்பதால் தேவன் உங்களை **நேசிக்கின்றார்.** மேற்குறிப்பிட்ட பிரதான **வசனத்தில்** எழுதியுள்ளதாவது எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களிடத்திற்குத் திரும்பி வருவேன் என்றாகும். தேவன் சர்வ பராக்கிரமத்தின் மகா **வல்லமையுள்ள** தேவனானவர். அவரிடத்தில் **மனந்திரும்பி** செல்வோமானால் அவருடைய **கடுங்கோபம் நீங்கி** அவர் எம்மை நோக்குவார் என்றாகும். ஆனாலும் தேவனால் **தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள** நீங்களும் நானும் அவரது பின்னால் வர வேண்டுமென எங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றார். சில மனிதர்களின் **உள்ளத்தில் ஆடம்பரம், தற்பெருமை, சுயநலம்,** அதிகமாக இருப்பதனால் எனக்கு யாருடைய **உதவியும்** தேவையில்லை, எனக்கு அனைத்தையும் தனிமையாக செய்ய முடியும் என்று அவர்கள் நினைப்பார்கள். சில வேளைகளில் **ஆவிக்குரிய** பிள்ளைகளும் அவ்வாறே நடந்துக் கொள்ளுகிறார்கள்.

தேவ பிள்ளைகளே! **சகரியா 1:3**இல் என்னிடத்தில் **மனந்திரும்புங்கள்** என்கிறார். நாம் இயேசுவைப் போல **குணநலன்கள், பரிசுத்தம் ஜெபம்,** என்பவற்றுடன், அவரைப் போல நாம் நன்மை மாத்திரம் செய்பவர்களாக இவ்வருடத்தில் முழுமையாக **மாற முயற்சி** செய்வோம். அத்தோடு மனிதர்களோடு **கோபதாபங்களை** நீக்கி தேவனிடம் **மனந்திரும்பி** வாருங்கள். ஏனெனில் உங்களைத் **தேர்ந்தெடுத்தது,** அழைத்தது தேவன். நீங்கள் தேவனை விட்டுத் தூரப் போய் விடாதீர்கள். இவ்வருடத்தில் நீங்கள் குடும்பமாக **சங்கீதம் 1ம் அதிகாரத்தில் 3ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளதைப் போல் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராத மரத்தைப் போலிருப்பான் அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்** என்று வாழும்படியாக வாழ்த்துகின்றேன். உங்கள் வாழ்க்கையிலும் புதிய ஆரம்பம் உருவாகட்டும் **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என்னை மன்னியுங்கள். நான் மனந்திரும்பி வாழ முயற்சி செய்கின்றேன். மனிதர்களோடு உள்ள பிரச்சினைகளின் காரணமாக உங்களை விட்டு தூரமாகச் சென்றேனா? உங்களிடம் திரும்பி வருகின்றேன். நீங்கள் என்னை ஏந்திக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில் . –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது."
(சங்கீதம் 65:11 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி **02** வியாழன்

## பயப்படாதீர்கள் இயேசுகிறிஸ்து உங்களோடிருக்கிறார்!

**இன்றைய வேதவாசிப்பு**

யோபு அதி: 15 – 16

**“...அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல்வைத்து, என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்;”** (வெளிப்படுத்தல் 1:17)

அன்பார்ந்த பிரியமும், வாஞ்சையுமுள்ள தேவனுடைய பிள்ளைகளே! சதாகாலங்களிலும் ஜீவிக்கின்ற இயேசு என்னும் பரிசுத்த நாமத்தை சொல்லி **இன்றும் சுபமான நாளை பெற்றுக் கொள்ளும்படி வாழ்த்துகின்றேன்.** இச் செய்தியின் **தலைப்பில்** காணப்படும் வேத வாக்கியத்தின்படி **இயேசுகிறிஸ்து** எம்மை நோக்கி **பயப்படாதே** என்று சொல்கிறார். **இன்றைய தினத்திலும் உங்களோடிருப்பதால் பயப்படாதபடி தைரியமாக** இந்நாளுக்கு முகங் கொடுங்கள்.

அன்பார்ந்தவர்களே! உங்கள் **எதிர்காலத்தைப்** பற்றி உங்கள் முன்னேற்றத்தைக் குறித்து நாளைய நாளைக் குறித்தோ உங்கள் **இருதயத்தில்** ஒரு **பாரத்தை** வைத்துக் கொண்டு **கவலைப் படாதிருங்கள்.** ஏனெனில் கவலைப்படுபவர்களை தேவன் **விரும்புவதில்லை.** ஆகையால் உங்கள் மீட்பர் இயேசுகிறிஸ்துவைப் பற்றும் **விசுவாசத்தோடு** சகலவற்றையும் அவரிடம் **கையளித்து** விட்டு அவர் உங்கள் **வேண்டுதல்களை** நிறைவு செய்து தரும்வரை **பொறுமையோடு** காத்திருங்கள். **சங்கீதம் 138:8 கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்** என்பதாக கூறுகின்றது. என் **ஊழிய வாழ்க்கையில்** முப்பது வருடங்களில் **பன்னிரண்டு வருடகாலமாக** என் தனிப்பட்ட சேவை காலத்தில் என் **சொந்த வாழ்க்கையில்** என் **ஊழிய வாழ்க்கையிலோ** எல்லாக் **காரியங்களிலும்** என் தேவைகள் யாவையும் மிகவும் அழகாக **நிறைவேற்றியிருக்கிறார்.** ஆகையால் **சங்கீதம் 138:8** இன் தேவ வசனத்தை என் **முழு உள்ளத்தோடு விசுவாசிக்கிறேன்.**

தேவ பிள்ளைகளே! உங்கள் **இருதயம் கலங்காதிருப்பதாக**! வேதாகமத்தில் **365** முறை **பயப்படாதே** என்ற வார்த்தை எழுதப்பட்டிருப்பதாக நான் வாசித்த ஒரு ஆத்மீக சஞ்சிகை மூலம் அறிந்தேன். மரித்தேன் ஆனாலும் **சதாகாலங்களிலும்** உயிரோடிருக்கிறேன் என்று **வெளிப்படுத்தல் 1:18** வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உங்கள் மீட்பர் இயேசுகிறிஸ்து இன்றும் **உங்களோடிருப்பதால்** உங்கள் வாழ்வைப்பற்றி **எதிர்காலங்களை** குறித்து பிள்ளைகளின் எதிர்காலம் இவைகளை நினைத்து **பயப்படாதிருங்கள்.** உள்ளத்தில் ஏற்படுகின்றதான அநாவசியமான **பயங்களுக்கு** நீங்கள் இடங் கொடுக்க வேண்டாம். தேவன் **சதாகாலங்களிலும்** உங்களோடிருக்கிறார் என்பதை **விசுவாசியுங்கள்.** அப்படி அவரை விசுவாசிக்கும் போது உங்களோடு இயேசுகிறிஸ்து இருப்பதை நீங்கள் காண்பீர்கள். இன்றும் **வெற்றியின் நல்ல நாளே!**



ஜெபம்

என் தேவனே! இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். நீர் உயிரோடிருக்கிறபடியால் நன்றி இயேசுவே! நீர் சதாகாலங்களிலும் எங்களுக்கு வருகின்றதான பயம் எம்மை ஆட்கொள்ளாதபடி உமக்குள் மகிழ்ந்து ஜீவிக்க எனக்கு தயை புரிந்தருளும். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்," (பரி.யோவான் 10:14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி
வெள்ளி
03

## உங்களை அந்தரங்கத்தில் காணும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
யோபு
அதி: 17 – 18

**"அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்."** (பரி:மத்தேயு 6:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் இனிமையான நாமத்தினால் **இன்று உங்களுக்கு சகல சௌபாக்கியங்களும் உள்ள நாளாக அமையும்படி வாழ்த்துகின்றேன்.** உலகில் வாழ்கின்ற ***திரளான ஜனங்கள்*** ஜீவனுள்ள தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதையும் சகல மனிதர்களுடைய வாழ்விலும் **நன்மைகளால் நிரப்பும் நல்ல தெய்வம்** ஒருவர் இருக்கிறார் என்பதை அறியாதபடி வாழ்வில் **பரிதபிக்கிறவர்களாக** இருக்கிறார்கள். ஆயினும் ஜீவனுள்ள தேவனைக் குறித்து அறிந்த நீங்கள் மிகவும் **பாக்கியவான்களாயிருக்கிறீர்கள்.**

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட வேத வசனம் அந்தரங்கத்தில் பார்க்கும் உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாகப் **பலனளிப்பார் என வெளிப்படுத்துகிறது.** ஆகையால் தேவனிடம் நல்ல **ஆசீர்வாதங்களை எதிர்பார்ப்பீர்களானால்** அநேக நன்மையான **ஈவுகளை** பெற்றுக் கொள்ள **வாஞ்சிப்பீர்களாயின்,** உங்கள் **அந்தரங்கமான** ஜீவியத்தை **சீர்படுத்திக்** கொள்ள வேண்டும். உங்கள் **சிந்தனைகள்** கிரியைகள் யாவும் தேவனுக்கு முன்பாக **குற்றமற்றதாக** காணப்படுவதாக. **ஆதியாகமம் 6:5**இல் வேதவாக்கியம் கூறுகிறது மனிதனுடைய **அக்கிரமம்** பூமியிலே பெருகினது என்றும் அவன் **இருதயத்தை** நினைவுகளின் **தோற்றமெல்லாம்** நித்தமும் பொல்லாததே என்று கர்த்தர் கண்டு இதன் மூலம் தேவன் **செயல்களை** மாத்திரமல்ல எம் **இருதயத்து சிந்தைகளின்** காரணங்களையும் **ஆராய்ந்து** பார்க்கிறார் என்பதாக. ஆகையால் உங்கள் **சிந்தைனைகளும்** செயல்கள் யாவும் பரிசுத்தமாக இருக்கக்கடவது ஏமாற்றுதல் **வஞ்சனைகள் பொறாமைகள்,** புறங் கூறுதல், **வைராக்கியங்கள், குரோதங்கள்** போன்ற எல்லா விதமான காரியங்களும் உங்கள் இருதயத்தை விட்டு நீக்கிப் போடுங்கள்.

தேவ பிள்ளைகளே! உங்கள் **இருதயத்தை பரிசுத்தப்படுத்துங்கள்.** நீங்கள் குற்றமற்றவராக வாழ்வீர்களாயின் ஒரு மனிதனும் உங்களுக்கு **விரோதமாக கிரியை** செய்து உங்களை ஜெயம் கொள்ள முடியாது ஆகையால் தேவன் **விரும்பாத** எந்த **காரியங்களையும்** தேவன் அறியாது **இரகசியமாக** நினைக்கவோ செய்யவோ **முயற்சிக்க** வேண்டாம். ஏனெனில் **பரத்திலிருந்து** உங்களை **அந்தரங்கத்தில்** காணும் தேவன் உங்களுக்கு **வெளியரங்கமாய் பலனளிப்பார்.** இன்று **ஜெயத்தின் நாள்!**



ஜெபம்

என் அன்பு தேவனே! நீங்கள் என்னை காண்கிற தேவன். மனிதன் என் இருதயத்தின் நினைவுகளை காணாவிட்டாலும் நீங்கள் என் சிந்தனைகளை காணகிறவர் என்பதை அறிந்துக் கொண்டேன். உங்களுடைய சமுகத்திலே குற்றமற்றவர்களாக ஜீவிக்க எமக்கு தயை புரிந்தருளும். இயேசுவின் நாமத்தில் ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"மனுஷனுடைய செய்கைக்குத்தக்கதை அவனுக்குச் சரிக்கட்டி, அவனவன் நடக்கைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிக்கிறார்." (யோபு 34:11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி 04

சனி

**எங்களுக்கு உடனடியாக விடுதலைக் கொடுக்கும் பரிகாரியாகிய இயேசுகிறிஸ்து**

இன்றைய வேதவாசிப்பு

யோபு

அதி: 19 – 20

**"உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான். அந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது."**

(பரி:யோவான் 5:9)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இன்றைய நாள் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் **நல்ல நாளாகவும் அமையுமாறு பிரார்த்திக்கின்றேன். என்னால் கூடாத காரியம் ஒன்றுண்டோ?** என்று வினாவிய **சர்வவல்லமை** பொருந்திய எம்மை உண்டாக்கிய **பரலோக** தகப்பன் மூலமாக அவருடைய புத்திர **சுவீகாரத்தைப்** பெற்று பிரித்தெடுத்துக் கொள்ளப்பட்டவர்களாகிய நாங்கள் உலக **வாழ்** மனிதர்களைப் பார்க்கிலும் **ஆசீர்வாதம் பெற்ற பாக்கியவான்களாயிருக்கிறோம்.**

அன்பார்ந்தவர்களே! உலகத்திற்கே பெரும் **சவாலாக** இருக்கும் இந்த உயிரைக் கொல்லும் **புற்றுநோய்** மனிதனுக்கு ஏற்படுமானால் அது அவனுடைய வாழ்க்கைக்கு பெரும் சவாலாக மாறிவிடுகிறது. ஆயினும் நீங்கள் **தைரியமாயிருங்கள், உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** ஏனெனில் உங்களை உருவாக்கிய தேவனால் **சகலமும் கூடும்** நீங்கள் அவருடைய **சொத்தாக** இருப்பதால் அவர் ஒரு நாளும் உங்களை **கைவிடமாட்டார்** அவர் தம்மிடம் உங்களை அழைத்தது வாழ்வின் கடைசிவரை **வெற்றியை** அளிக்கவே. உங்கள் வாழ்வை ஜெயத்தின் பாதையில் வழிநடத்தும்படியாகவே. **பரி:யோவான் 5:9**இல் உடனே அந்த மனுஷன் **சொஸ்தமாகி** தன் **படுக்கையை** எடுத்துக் கொண்டு **நடந்து** போனான் என்பதாக கூறப்பட்டுள்ளது. அவன் சரீர பெலவீனத்தினால் **முப்பத்தெட்டு வருட** காலமாக **படுக்கையிலே** இருந்தவன் ஆயினும் **இயேசுகிறிஸ்து** அவன் அருகில் வந்து அவனுக்கு கூறிய வார்த்தை **எழுந்திரு உன் படுக்கையை** எடுத்துக் கொண்டு **நட** என்பதே. அப்பொழுது அவன் அந்த நிமிடமே படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போனான்.

அன்பு பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து அவனிடம் கூறினார்: எழுந்திரு உன் **படுக்கையை** எடுத்துக் கொண்டு **நட**, அவ் வார்த்தை சொன்ன உடனே அவன் **சுகம்** பெற்றானெனில் ,அவருடைய **வாயின் வார்த்தைகள்** எவ்வளவு **வல்லமை** உள்ளது என **அறிகிறீர்களா? இயேசுகிறிஸ்துவின்** வார்த்தைகளை கர்த்தர் **நிறைவேற்றுகிறார்.** இன்றும் **அவ்வண்ணமேயாகும்.** உங்களின் **சகல வியாதிகள் தோல்விகள், பிரச்சினைகள்** இவைகளையெல்லாம் அவரிடம் கூறுங்கள். அவர் **வாயிலிருந்து புறப்படும்** ஒவ்வொரு வார்த்தையிலும் வல்லமையிருக்கிறது. உங்கள் பிரச்சினைகளுக்கு, நோய்களுக்கு, வேதனைகளுக்கு, விடுதலையைப் பெற்றுத் தருகிறது. முழு உள்ளத்தோடு விசுவாசித்து இயேசு என்னும் நாமத்தை உச்சரித்து ஜெபித்து ஜெயத்தை பெற்றுக் கொள்ளுங்கள். **இன்று வெற்றிகரமான நாள்!**



ஜெபம்

என் தகப்பனே! இயேசுகிறிஸ்துவுக்கூடாக எனக்கு உடனடியாக விடுதலையை பெற்று தருவதால் நன்றி. என் ஜீவியத்தை உங்களிடம் ஒப்படைக்கிறேன். என் வாழ்க்கையில் ஏற்படுகின்ற எல்லா பிரச்சினைகளுக்கும் நீரே விடுதலைக் கொடுத்து என்னை ஆசீர்வதியும். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார்; நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார். நுகத்தடியையும், விரல் நீட்டுதலையும், நிபச்சொல்லையும், நீ உன் நடுவிலிருந்து அகற்றி." (ஏசாயா 58:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 05
ஞாயிறு

**அநேக வருடங்களாக உபத்திரவப்படுபவர்களை இரட்சிக்கும் தேவன்!**

இன்றைய வேதவாசிப்பு
யோபு
அதி: 21 – 22

"முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான். படுத்திருந்த அவனை இயேசு கண்டு...."
(பரி.யோவான் 5:5,6)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! எம் ஆண்டவரும் அருமையான இரட்சகருமான ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் ஒரு நல்ல நாளை பெற்றுக் கொள்ளுங்கள் என வாழ்த்துகின்றேன்.** சர்வ வல்லமையுள்ள **படைப்பின்** தேவனைக் குறித்தும், அவருடைய குமாரனானது **இயேசுகிறிஸ்துவைக்** குறித்தும் **அறிந்துக்** கொள்ளத்தக்கதான உன்னத **வரப்பிரசாதத்தை** பெற்றுக் கொண்டவர்கள் அனைவரும் மிகவும் **ஆசீர்வாதம்** பெற்றவர்கள் ஆவார்கள்.

தேவ பிள்ளைகளே! மேலே கொடுக்கப்பட்டுள்ள **வேதவாக்கியத்தில் முப்பத்தெட்டு வருஷம் வியாதிக்** கொண்டிருந்த ஒரு மனிதன் அங்கே இருந்தான். **படுத்திருந்த** அவனை இயேசு கண்டதையும் அதன் அடுத்த **பகுதி** அவன் வெகுகாலமாய் **வியாதிஸ்தனென்று** அவனை நோக்கி **சொஸ்தமாக்க** வேண்டுமென்று **விரும்புகிறாயா?** என்று கேட்டார் என்பதாக எழுதப்பட்டிருக்கிறது. அந்த **வியாதியஸ்தன்** அவரைக் குறித்து அறியாதபடியால் அவன் தன்னை **சொஸ்தமாக்குமாறு** கேட்கவில்லை. ஆயினும் அவனை **படைத்த** தெய்வம் **முப்பத்தெட்டு வருஷம்** படுக்கையில் இருந்ததைக் கண்டு அவருடைய மகனாகிய எம் **இரட்சகரும்** ஆண்டவருமான இயேசுகிறிஸ்துவை அவனிடம் அனுப்பினார். அன்று எமது **இயேசுகிறிஸ்து 38 வருடம் படுக்கையிலிருந்த** நோயாளியை **எருசலேமுக்கு தேடிச்** சென்று சுகமாக்கினார்.

தேவ பிள்ளைகளே! உங்கள் வாழ்க்கையில் காணப்படும் **பிரச்சினைகள், வியாதிகள், துன்பங்கள்** போன்ற இப்படியான **பாடுகளினிமித்தம்** அநேக **வருடங்களாக,** காலங்களாக வேதனையிலும், **துன்பத்திலும்** வாழ்ந்துக் கொண்டிருக்கிறீர்களா? ஆயினும் உங்கள் **உள்ளம் கலங்காதிருக்கட்டும்.** எருசலேமில் காணப்பட்ட **பெதஸ்தா என்னும் குளத்திற்கு சென்று 38 வருடம்** படுக்கையிலிருந்த மனிதனை சுகமாக்கிய **இயேசுகிறிஸ்து** இன்றும் உங்களைத் **தேடி** உங்கள் அருகில் வருவார். உங்களுக்கு **உபகாரம்** செய்ய உலகினில் யாருமில்லை என **கவலைப்படாதிருங்கள்!** தேவனைக் குறித்தும், அவருடைய குமாரனான இயேசுகிறிஸ்துவை நீங்கள் இன்றைய தினம் அறிந்திருக்கிறபடியால் நீங்கள் **முழங்கால்படியிட்டு** இயேசுவை நோக்கி ஜெபியுங்கள். **வெகுகாலமாக** நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் **விடுதலை,சுகம், வாழ்க்கையில் சந்தோஷம், நிம்மதி ஆறுதல்** போன்றவைகளை இயேசுகிறிஸ்துவிடமிருந்து பெற்று மிகுந்த ஒரு **ஆசீர்வாதமான** வாழ்க்கையை நாம் வாழ முடியும். இன்றைய **நாள் ஜெயத்தின் நாள்!**


ஜெபம்

என் தகப்பனே! உங்கள் குமாரானாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் எம்மை மீட்டுக் கொண்டபடியால் நன்றி. இன்றைய தினத்திலும் என் துன்ப, துயரங்கள், வியாதிகள்,, துன்பங்கள் யாவற்றிலிருந்து எம்மை மீட்டுக் கொண்டு விடுதலையாக்கி என்னை ஆசீர்வதிக்குமாறு ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் புண் ஆறாததாயும் உன் காயம் கொடிதாயும் இருக்கிறது. உன் காயங்களைக் கட்டும்படி உனக்காக ஏற்படுவாரில்லை; உன்னைச் சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களுமில்லை."
(எரேமியா 30:12,13 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி 06

திங்கள்

## உங்கள் மீட்பராகிய தேவனிடம் திரும்பி வாருங்கள்!

இன்றைய வேதவாசிப்பு

யோபு

அதி: 23 – 24

**"என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன்."**
(ஏசாயா 44:22)

தேவ சாயலாக உருவாக்கப்பட்ட தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **இன்றைய நாள் மகிழ்ச்சி நிறைந்த நந்நாளாக அமையுமாறு இன்றைய நாளிலும் உங்களை வாழ்த்துகின்றேன். இவ்வுலகத்தின் ஞானம்** தேவனுக்கு முன்பாகப் **பைத்தியமாயிருக்கிறது** என்று **தேவ வசனம்** உரைக்கிறபடியால் மனிதன் தனக்கு **உபகாரத்தை** பெற்றுக் கொள்ள வேண்டுமானால் **யாரிடம்** செல்ல வேண்டும் என அறியாதவர்களாக, **பரிதபிக்கிறவர்களாக** இருக்கிறார்கள். ஆனால் மனிதனுக்கு எல்லா வகையிலும் உதவி புரிந்து **ஒத்தாசையளிக்கும் சர்வ சிருஷ்டிகரான** தேவனிடத்திற்கு வந்திருக்கின்ற நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவோம்.

அன்பார்ந்தவாகளே! **ஏசாயா 44:22**இல் **எழுதப்பட்டிருப்பது... என்னிடத்தில் திரும்பு! உன்னை நான் மீட்டுக் கொண்டேன்** என்பதாக. **இவ் வாக்கியத்தின் முதல் பகுதியில் உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும் உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றி விட்டேன்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி மனிதனது **வாழ்க்கையில் பாவம்** தங்கியிருக்குமிடத்து அவனுக்கு **ஆசீர்வாதத்தை** பெற்றுக் கொள்ள முடியாது என்பதாகும். ஆகையால் மனிதன் **பாவத்திலிருந்து மீளாதபடி** அநேக மாறுபாடான வழிகளில் தமக்கு **ஆசீர்வாதத்தை** பெறும்படியாக முயற்சிகளை மேற்கொண்டு அதைப் பெற்றுக் கொள்ள முடியாமல் **தடுமாறுகிறான்.** ஏனெனில் **பாவங்கள்** மனித வாழ்க்கையில் நிலைக் கொண்டிருக்கும்வரை மனிதனுடைய வாழ்க்கையில் அநேக **துன்பங்களை அநுபவிக்க** வேண்டியதாக உள்ளது.

தேவ பிள்ளைகளே! **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** இன்றைய தினம் மறுபடியுமாக உங்கள் தேவனாகிய ஆண்டவரை **நோக்கி திரும்பி** வாருங்கள். ஒரு முறை உங்கள் **பாவங்கள்** யாவற்றிலுமிருந்து **விடுதலைக்** கொடுத்ததை மறந்து அவரை விட்டு **விலகி தூரமாய்** சென்று விட்டீர்களா? ஆயினும் இன்று நீங்கள் திரும்பி அவரிடம் வருவீர்களானால் உங்கள் **மீறுதல்களை மன்னித்து** மறுபடியும் **அன்போடு** சேர்த்துக் கொள்வார். அதனால் இன்று முதல் எல்லாக் காரணங்களிலும் மனிதனுடைய **உதவிகளை, ஒத்தாசைகளை** அணுகாமல் உங்களை **படைத்த** இரட்சகரான இயேசுகிறிஸ்துவை நோக்கி உங்கள் **குரலை உயர்த்துங்கள்.** உங்கள் சத்தத்தைக் கேட்ட பரலோக தேவன் உங்களுக்கு பதில் கொடுத்து **ஆசீர்வதிப்பார். இன்றைய நாள் வெற்றியின் நாள்!**



ஜெபம்

என் தேவனே! என் அன்புத் தகப்பனே! பாவத்திலிருந்து என்னை இரட்சித்த என் இயேசுகிறிஸ்துவே! என் உளமார்ந்த நன்றிகளை உமக்கு தெரிவிக்கிறேன். உம் சமுகத்தைவிட்டு உம்மை மறந்து தூரப் போனேன். என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"...அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்;..."
(யோவேல் 2:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 07
செவ்வாய்

## ஜெபிக்கிற யாவருக்கும் கிருபை அளிக்கும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
யோபு
அதி: 25 – 26

**"ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்."**
(சங்கீதம் 86:5)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு நல்ல நாளாக விளங்கும்படியாக பிரார்த்திக்கின்றேன்.** பரலோகத்திலிருந்து **கிரியை** செய்யும் எங்கள் **படைப்பின்** தேவனை அறிந்து கொண்ட சகல ஜனங்களும் **அதிரஷ்டசாலிகள்** என்பதை இன்றும் நான் உங்களுக்கு கூறுகிறேன். உண்மையில் இது சத்தியம்.

தேவ பிள்ளைகளே! ஆண்டவர் **உண்மையிலேயே** நல்ல தேவன் மேலே தரப்பட்ட **சங்கீதம் 86:5**இல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **நல்லவரும், மன்னிக்கிறவரும், உண்மையானவருமாயிருக்கிறார்,** அவரை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் **கிருபை மிகுந்தவராக** இருக்கிறார் என்பதாக. ஆகையால் **இருதயத்தில் கலக்கமில்லாதவர்களாக** இருங்கள். இன்றும் இத் தேவ செய்தியை வாசிக்கும் நீங்கள் **அதிகாலையில்** தேவனிடம் பேசினீர்களா? அதே போல் **நேற்றும்** அவரோடு பேசினீர்களா? அப்படியாயின் நீங்கள் **பாக்கியமானவர்கள்.** ஏனெனில் **ஜெபிக்கிறவர்கள்** யாவர் மேலும் அவர் **கிருபையுள்ளவராக** இருக்கிறார். அவரால் நீங்கள் **தினந்தோறும்** அநேக கிருபைகளை பெற்றுக் **கொள்கிறீர்கள்** அல்லவா?

தேவ பிள்ளைகளே! அவருடைய கிருபை **காலை தோறும் புதிதானவைகள்** என்று வேதவசனம் கூறுகிறது. நீங்கள் நாள்தோறும் ஜெபம் செய்யாததினாலே அநேக **வேதனைகள், பிரச்சினைகள், வியாதிகள்,** ஏற்பட்டு அதனால் வேதனையை **அனுபவித்துக்** கொண்டிருக்கக் கூடும். ஏனெனில் நீங்கள் **ஜெபிக்கும்** போது தேவனுடன் **சமீபமாக பேச** முடியும். ஆனால் **ஜெபிக்காவிட்டால்** அந்நாளின் உங்கள் வாழ்க்கையிலே **சாத்தான்** அநேகவிதமான **சோதனைகளைக்** கொண்டு வருவான். **ஜெபிக்காமல்** இருக்கும் போது **சாத்தானுக்கு** எமக்கு **சோதனைகளை** ஏற்படுத்துவதற்கு இலகுவாக அமையும். ஆகையால் இன்று முதல் உங்கள் **ஜெப** வாழ்க்கையை திரும்பவுமாக **புதுப்பித்துக்** கொள்ளுங்கள் அப்போது அவரது அளவு கடந்த கிருபையை நம்மீது **பொழிந்து** மறுபடியும் உங்களை **ஆசீர்வதிப்பார். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் அன்பு இயேசுவே! நீங்கள் கிருபையுள்ள தேவன் உங்களை நோக்கி கூப்பிடுகிற யாவர்மேலும் அளவில்லா கிருபை அளிப்பவர்! என்பதை நான் அறிவேன். என் ஜெப வேளையை குறைவுபடாதபடி ஜெபத்திலே தரித்திருந்து ஜெப காலத்தை உமக்களிக்க கிருபைத் தந்து என்னை ஆசீர்வதியும். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்." (எரேமியா 29:12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி 08

புதன்

## எங்களை கைவிடாத தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

யோபு

அதி: 27 – 28

**"நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்."** (பரி.யோவான் 14:18)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் **இனிய நாமத்தினால் இன்றைய தினம் மகிழ்ச்சியான மனரம்மியமான நாளாக அமையும்படியாக வாழ்த்துகிறேன்.** இவ்வுலக வாழ் ஜனங்களில் பெரும்பாலானோர் **வஞ்சனையும் தந்திரமானவர்களாகவும்** இருக்கிறார்கள். நீங்களும் இப்படியானவர்களிடம் அகப்பட்டு பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்த சந்தர்ப்பங்கள், **அநுபவங்களை** பெற்றிருக்கக் **கூடும்.** ஒரு மனிதனை இன்னுமொரு மனிதன் **ஏமாற்றி வஞ்சிக்கலாம்.** ஆனால் எம் ஆண்டவராகிய **இயேசுகிறிஸ்துவோ** ஒரு நாளும் **வஞ்சிக்கவோ ஏமாற்றவோ மாட்டார்.**

தேவ பிள்ளைகளே! **அநாதி சிநேகத்தால்** எம்மை நேசித்தவரும் **காருண்யத்தால்** எம்மை இழுத்துக் கொண்டவருமான எம் **இரட்சகராகிய இயேசுகிறிஸ்து** ஒரு போதும் நம்மை **கைவிடமாட்டார்.** நம்முடைய தேவன் **இப்பூலோகத்தைக்** குறித்தும், **பரலோகத்தைக்** குறித்தும், எம் **ஜீவியத்தைக்** குறித்தும், ஆத்துமாவைக் குறித்தும், எல்லாக் காரியங்களையும் **மிகத் தெளிவாக** சத்திய வசனங்களுக்கூடாக எமக்கு **கற்றுத் தந்திருக்கிறார்.** எங்கள் தேவனுடைய வார்த்தைகள் எல்லாமே **சத்தியமானவைகள்.** அவருடைய **வாயின் வார்த்தைகள்** ஒரு போதும் பொய்யானதாக இல்லை. எமது செய்தியின் ஆரம்ப வசனம் **பரி.யோவான் 14:18**இல் நான் உங்களை **திக்கற்றவர்களாக விடேன்,** உங்களிடத்தில் வருவேன் என்பதாகும். உங்கள் **உள்ளம் கலங்காதிருப்பதாக!** எங்கள் பரமபிதா உலகத்தோர் மத்தியிலிருந்து எம்மைத் **தெரிந்துக் கொண்டு** பிரித்தெடுத்துக் கொண்டது எம்மை அவருக்குரிய தேவ பிள்ளைகளாக மாற்றும்படியாகவே. கர்த்தர் **பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் பார்க்கிலும் நான் உன்னை மேன்மையாக வைப்பேன்** என்று வாக்களித்துள்ளார்.எம்மை **வாலாக்காமல் தலையாக்குவேன். நீ கீழாகாமல் மேலாவாய்** என்றும் வாக்களித்துள்ளார். இவ் வார்த்தைகள் எம் வாழ்க்கையில் **செயல்படும்படியாக** நாம் அவருடைய **கட்டளைகளை** கைக் கொண்டு அவைகளின்படி நடக்கவும் அவைகளுக்கு செவி கொடுத்து அவருக்கு **கீழ்படிந்து** வாழ்க்கையை அவருக்கு **ஒப்புவிக்க** வேண்டும் அப்பொழுது அவரது **வாக்குத்தத்தங்கள்** இன்னும் எம் வாழ்க்கையில் அதிகமாக நிறைவேறும்.

தேவ பிள்ளைகளே! **சர்வபராக்கிரமத்தின்** தேவன் மனிதர்களாகிய எம்மை ஒரு போதும் மறப்பதில்லை. அவர் **பரிசுத்த ஆவியானவரை** எம் வாழ்விற்குள் அனுப்புகிறபடியால் நம் தேவன் **பரிசுத்த ஆவியானவருக்கூடாக** எம் வாழ்க்கையை மாற்றியமைத்து **சதாகாலங்களிலும் ஆசீர்வாதத்தை** அளிக்கிறார். உங்களுக்கு **வெற்றியின் நாள்!**

**ஜெபம்**

என் தகப்பனே! உங்கள் ஆவியானவரை என்னிடம் அனுப்புவதால் நன்றி. அவர் என்னோடிருப்பதால் ஒரு நாளும் என்னை மறக்க மாட்டீர்கள் தகப்பனே! உங்கள் அன்பினால் என்னை கிட்டிச் சேர்த்துக் கொள்ளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்." (எசேக்கியேல் 36:27 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 09
வியாழன்

# சாத்தானின் சவால்களின் போது நீதிமான்களாகிய எங்களுக்காக விவாதம் புரியும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
யோபு
அதி: 29 – 30

**"...முகாந்தரமில்லாமல் அவனை நிர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவினபோதிலும், அவன் இன்னும் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான் என்றார்."** (யோபு 2:3)

அன்பார்ந்த என் அருமை தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தால் இன்னும் மகிழ்ச்சிக்குரிய, நன்மைகள் நிறைந்த **நல்ல நாளாக** அமையுமாறு வாழ்த்துகிறேன். **உலக மாந்தர்** மத்தியில் எம்மை வேறுபிரித்து **அவருடைய ஜனங்களாக** அவரின் **சுவிகாரப்புத்திரர்களாக** மாறும்படி எம் ஒவ்வொருவரையும் **அழைத்து ஜாதிகள்** மத்தியில் எம்மை **விஷேசித்தவர்களாக** மாறும் **பாக்கியத்தை** அளித்தவர் எம் பரலோக பிதாவே!

அன்பார்ந்தவர்களே! **ஜெயம் பெற்று** வாழவும் **நிறைவான** குறைவு படாத ஆசீர்வாதங்கள் மாத்திரமல்ல. எமக்கு **விரோதமாக** ஆத்மீக ஜீவியத்தை சீர்குலைக்க எத்தனிக்கும் **சாத்தானுடைய செயல்கள், திட்டங்களில்** இருந்து எம்மை **பாதுகாக்கவும்** உலக வாழ்வில் அவன் உண்டாக்க எத்தனிக்கும், **திட்டங்கள்** அதாவது துன்பம், பிரச்சினை, வறுமை, வியாதி, வியாகுலம், சமாதனமின்மை போன்றவைகளிலிருந்து எம்மை **பாதுகாக்கவும்.** உலக வாழ்வில் நமக்கு ஏற்படுகின்ற போராட்டங்களிலிருந்து மீட்டுக் கொள்ளும் பொருட்டு அவர் நடப்பிக்கும் **கிரியைகள் ஏராளம்.** இன்றைய செய்தியின் ஆரம்ப வேத வசனத்தின் இடம் பெற்ற யோபுவின் புத்தகத்தில் யோபைக் குறித்து **அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கப்பட்டிருக்கிறது** என்று கூறப்பட்டுள்ளது. தேவனுடைய பிள்ளைகளாகிய எமக்கு அருளப்பட்ட பாதுகாப்பின் வேலியைக் குறித்தே கூறியிருக்கிறார்.

தேவன் **என் தாசனாகிய யோபுவைப் போல் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்** போல பூமியில் ஒருவனும் இல்லையென்று யோபைக் குறித்து சாத்தானிடம் கூறுகிறார். ஆனாலும் இதைக் கேட்டவுடன் பொறாமைக் கொண்ட சாத்தான் அச் சந்தர்ப்பத்தில் யோபு சகலவற்றிலும் ஆசீர்வாதமாக இருப்பதைக் கண்டு தேவனை நோக்கி சாத்தான் இப்படியாக யோபின் **பாதுகாப்பான வேலியைக்** குறித்து கூறி அந்த பாதுகாப்பான **வேலியை** எடுத்துப் போட்டு யோபை **வாதிக்கும்படியாக உத்தரவை** பெற்றுக் கொள்கிறான். தேவ பிள்ளைகளே! இப்படியாக ஒரு மனிதனை **வேதனைப்படுத்த** அல்லது **வாதிக்க சாத்தானுக்கு** தேவன் சந்தர்ப்பம் அளித்தது ஒரு உத்தமமான மனிதனுக்கு விரோதமாக சாத்தான் தூண்டுவதால் மனிதன் தன் உத்தமத்தில் நிலைநின்று விசுவாசத்தில் ஜெயம் பெறுவான், அவன் தனது பரிசுத்தத்தில் ஜீவிப்பான் என்ற எண்ணத்தோடேயாகும். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! நீங்களும் யோபுவைப்போல் உண்மையுள்ளவராய் தேவ பயத்தோடே பாவத்துக்கு அஞ்சி ஜீவிக்கின்றவராக இருந்தால் உங்களைக் குறித்தும் தேவன் சாத்தானுக்கு விரோதமாக செயல்படுவார். யோபுவின் தேவன் உங்களோடு இருப்பாராக! **இன்று வெற்றியின் நாள்!**



ஜெபம்

என் தேவனே! யோபின் மெய்யான தெய்வமே இன்றும் நீங்கள் என்னோடு ஜீவனுள்ளவராக இருப்பதால் என்னை குற்றம் சுமத்தும் சாத்தான் இன்றும் அவ்வண்ணமாகவே செயல்படுகிறவனாக இருக்கிறான். யோபுவைப் போல் உத்தமத்தில் நிலைத்திருந்து வெற்றி பெற கிருபை தருமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"துன்மார்க்கனுடைய வழி கர்த்தருக்கு அருவருப்பானது; நீதியைப் பின்பற்றுகிறவனையோ அவர் நேசிக்கிறார்."
(நீதிமொழிகள் 15:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி 10 வெள்ளி

**பரிசுத்தாவியானவர் உங்களுக்குள் வாசம் பண்ணுகிறபடியால் நீங்கள் அவரை அறிந்துக் கொள்வீர்கள்!**

இன்றைய வேதவாசிப்பு
யோபு
அதி: 31 – 32

**"...அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்."** (பரி.யோவான் 14:17)

தேவனுக்குப் பிரியமான! தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்களனைவரும் இயேசு என்னும் திரு நாமத்தினாலும் நமக்குள் ***நிலைநிற்பவருமான*** என்றென்றைக்கும் நம்மோடிருப்பருமான பரிசுத்த ஆவியானவரின் ***ஐக்கியத்தால்*** இன்றும் ***மகிழ்ச்சிகரமான*** நாளை ஆசீர்வாதத்துடன் பெற வாழ்த்துகிறேன். ***மாயை*** நிறைந்ததான உலகில் இயல்புக்கேற்றபடி வாழ்ந்துக் கொண்டிருந்த எங்களை அவருடைய ***சொந்த தீர்மானத்தின்படி*** எம்மை தமக்கென்று ***தெரிந்துக்*** கொண்டு தனது ***சந்திதி*** என்னும் ***புத்திர சுவீகாரத்தை*** தந்தருளி எம்மை ஆசீர்வதித்து வழி நடத்தும் கர்த்தர் கரம் எம்மோடிருக்கிறது.

அன்பார்ந்தவர்களே! அது மாத்திரமல்ல, பரலோக ***பெலத்தினால்*** நாங்கள் நிரம்பப்பட்டு ***பரிசுத்தமாய்*** வழி நடத்தும்படியாக பரிசுத்த ***ஆவியானவரை*** நாம் பெறும் பாக்கியத்தை பரலோக பிதா எமக்கு அளித்திருக்கிறார். ***கிறிஸ்துவுக்குள்*** வாசம் பண்ணும் பரிசுத்தாவியானவர் எமக்குள் வாசம் பண்ணி ஆறுதல், ***அமைதி,*** சமாதானத்தை தரும் ஒப்பற்ற பரிசுத்த ஆவியானவராவார். ***மரணத்தை*** ஜெயம் கொண்டு ***உயிர்த்தெழுந்த*** மெய்யான இயேசுகிறிஸ்துவே பரலோகத்திற்கு ***எழுந்தருளி*** திரும்பவும் பரிசுத்த ஆவியானவராக இவ்வுலகிற்கு வந்து எங்களுக்குள் வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறார். ஆகவே ***பரி.யோவான் 14:17***இல் அவர் உங்களுடனே ***வாசம்பண்ணி*** உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள். ***மெய்யாகவே மெய்யாகவே*** உங்களுக்குச் சொல்லுகிறேன் நான் என் பிதாவினிடத்திற்கு போகிறபடியினால், நான் பிதாவை வேண்டிக் கொள்வேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் ***சத்திய ஆவியாகிய*** வேறொரு ***தேற்றரவாளனை*** அவர் உங்களுக்கு ***தந்தருளுவார்.*** என்பதாகவும் அவருடைய வாய் வார்த்தைகள் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் எமக்குள் வாசம் பண்ணுவதால் நாம் அவரை அறிந்தவர்களாக இருக்கிறோம். ஆகையால் எம் வாழ்க்கையில் அவரின் ***கற்பனைகளை*** கைக் கொண்டு தேவனில் அன்புக் கூர்ந்து வாழும் தகுதி பெற்றவர்களாயிருக்கிறோம்.

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ***தேவ ஆவியானவரைக்*** குறித்து அறிந்தவர்களிடம் அவரின் ***எதிர்பார்ப்பு*** என்ன என்பதை எம் வாழ்க்கை எப்படி ***அமைய*** வேண்டும் என்பதை எங்கள் ஆத்தும ஜீவியம் ***ஆவியில்*** வளர்வது எப்படியென்று எல்லாக் ***காரியங்களையும்*** அவர் வெளிப்படுத்தி வழி நடத்துகிறார். அது போலவே நீங்களும் உங்களை மாற்றிக் கொண்டு ***பரிசுத்தாவியானவரின் அன்பு*** வழிநடத்துதலுக்கு ***இடங் கொடுத்த*** ஆசீர்வாதங்களைப் பெற்று மகிழ்ந்திருங்கள். ***இன்றைய நாள் மகிழ்ச்சியின் நாள்!***




என் தேவனே! என்னை நேசிக்கிறவரும் என்னை ஆவியினால் அபிஷேகித்தவருமான என் அன்புத் தகப்பனே! உங்கள் சித்தம் என்னில் நிறைவேறும்படி நான் கீழ்படிந்து ஆவியானவருடன் இணைந்து ஜீவிக்கும்படி என்னை வழிநடத்தி ஆசீர்வதிக்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." (பரி.யோவான் 14:23)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி 11

சனி

**சகல படைப்புக்களையும் ஆளுகை செய்ய எமக்கு அதிகாரம் கொடுக்கும் தேவன்!**

இன்றைய வேதவாசிப்பு

யோபு அதி: 33 – 34

**"பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்."** (ஆதியாகமம் 1:28)

தேவனுக்குள் பிரியமான என் தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தால் கிருபையும் சமாதானமும் இன்றைய தினத்தில் பெருகுவதாக. இன்று மிக **விஷேசித்த ஆசீர்வாதமான நாளாக** வேண்டுமென வாழ்த்துகிறேன். உலகத்தை படைத்தவர் எம் **படைப்பின் காரண** கர்த்தர். எம்மை தமது **சொந்த ஜனமாக** மாற்றிக் கொண்டதுமல்லாமல் எல்லா **ஜாதிகளுக்கும்** மேலாக நம்மை **விசேஷித்தவர்களாக** வாழச் செய்கிறார்.

தேவ பிள்ளைகளே! மேலே காணப்படும் வேத வசனத்தில் கர்த்தர், முதல் மனிதனையும் ஸ்திரியையும் உண்டாக்கி ஆசீர்வதித்து அவர்களை **பலுகிப் பெருகி** பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி **சமுத்திரத்தின் மச்சங்களையும்** ஆகாயத்து **பறவைகளையும்** பூமியின் மேல் நடமாடுகிற சகல **ஜீவஜந்துக்களையும்** ஆண்டுக் கொள்ளுங்கள் என்று எழுதப்பட்டுள்ளது. நம் **படைப்பின்** தேவன் ஆதாம் ஏவாளை படைத்து இருவருக்கும் பூமியில் சகல அதிகாரத்தையும் அளித்து அவர்களின் **பரம்பரையில்** வருகின்ற சந்ததிகளுக்கும் அந்த அதிகாரத்தை உரிமையாகக் கொடுத்தார். அவர்களின் **மீறுதல்கள்** மூலம் அந்த **வரப்பிரசாதத்தை** இழந்து போனார்கள். ஆனாலும் நீங்கள் **கலங்காதிருங்கள்!** மனிதர்களை **பாவ சாபத்திலிருந்து** விடுவிக்கவும் இழந்து போன வரப்பிரசாதமான மகிமையை பெற்றுத் தரும்படியாக தன்னுடைய ஒரே குமாரனான **இயேசுகிறிஸ்துவை** இப் பூமியில் **அவதரிக்கச்** செய்து **ஜீவ** பலியாக சிலுவையில் மரிக்கும்படி ஒப்புக் கொடுத்தார். அதுமாத்திரமல்ல மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழும்பி பரலோகம் சென்று தேவாவியானவராக எம் உள்ளத்தில் வாசம்பண்ணும்படி பரிசுத்தாவியானவராக அனுப்பப்பட்டார்.

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவான மெய்யான தேவன் **வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களையும் மேற்கொள்ள எமக்கு வல்லமை கொடுத்திருப்பதாக எமக்கு வாக்களித்துள்ளார். பரிசுத்தாவியானவர்** எமக்குள் இறங்கி வரும்பொழுது நாம் புது பெலத்தை பெற்றுக் கொள்வோம் என கூறியிருக்கிறார். ஆகையால் நாம் **பெலவீனர்கள்** அல்ல. சகல **வல்லமைகளை** பெற்றுத் தரும் ஆவியானவர் இன்றும் என்றும் சதாகாலங்களிலும் உங்களோடிருக்கிறார். உங்களுக்கு **ஜெயத்தின் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! மனிதர்களை மிகவும் நேசிக்கும் என் பரலோக தகப்பனே! உங்களால் கொடுக்கப்பட்ட ஆளுகையை தன் மீறுதல்களால் இழந்து போன வேளையிலும் ஆவியானவருக்கூடாய் மறுபடியும் எமக்கு அந்த அதிகாரத்தையும் வல்லமையும் கொடுத்தபடியால் நன்றியோடு உங்களைத் ஸ்தோத்தரிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது."
(பரி.லூக்கா 10:19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 12
ஞாயிறு

## மேன்மையும், மகிமையும் பொருந்திய மகிமையின் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
யோபு
அதி: 35 – 36

**"...என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர்; மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்துகொண்டிருக்கிறீர்."**
(சங்கீதம் 104:1)

அன்பார்ந்த என் தேவ பிள்ளைகளே! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தால் அன்போடு உங்களை **வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.** தேவ கிருபையால் பெற்றுக் கொண்ட **நல்ல** நாளே இந்நாளாக இருக்கிறது. என்னையும், உங்களையும் உருவாக்கிய தேவனானவர் **மகிமையும் கௌரவமும்** மிக்கவர். அவர் நல்லவரும் உத்தமமானவருமாயிருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! எம் தேவாதி தேவனுடைய **குணாதிசயங்களை** எழுத்தில் வடிவில் வர்ணிக்க முடியாது. தேவனோடு **ஆவியிலே நெருங்கி** அவருடன் கலந்து உறவாடி ருசித்துப் பாருங்கள். அப்போது அவர் உங்களுக்கு **வெளிப்படுவார். யாத்திராகமம் 34:14**இல் கர்த்தருடைய நாமம் **எரிச்சலுள்ளவர்** என்பது. அவர் எரிச்சலுள்ள தேவனே ஆகையால் அந்நிய தேவனை நீ பணிந்துக் கொள்ள வேண்டாம் என்பதாக கூறப்படுகின்றது. மேலும் **ஏசாயா 43:20**இல் நான் தெரிந்துக் கொண்ட என் ஜனத்தின் தாகத்திற்கு **வனாந்தரத்திலே** தண்ணீர்களையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவதினால் **காட்டுமிருகங்களும், வலுசர்ப்பங்களும்** கோட்டான் குஞ்சுகளும் என்னைக் **கனம்** பண்ணும் என்பதாகவும் **ஆதிமுதற்** கொண்டு தலைமுறை, தலைமுறைகளை வர்த்திக்கப்பண்ணி **விருத்தியடையச்** செய்வது யார்? **முந்தினவராகிய** நான் தானே **பிந்தினவர்களோடு** இருக்கிறேன். ஆகவே பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்து கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, **இளைப்படைவதுமில்லை.** அவருடைய தெளிந்த புத்தியை ஞானத்தை **ஆராய்ந்து** அறிய முடியாது என அநேக தேவ வார்த்தைகள் வெளிப்படுத்துகிறது.

தேவ பிள்ளைகளே! தைரியமாயிருந்து **திடமனதுள்ளவர்களாக** இருங்கள். அவருடைய கரத்தின் விஷேசித்த **சிருஷ்டிகளாகிய** உங்களை அவர் அளவில்லாமல் நேசிக்கிறார். அவருடைய **புத்திர சுவிகாரத்தின்** ஆவியைப் பெற்று அவருடைய பிள்ளைகளாக **திகழும்** நம்மைக் கொண்டு அவருடைய நாமம் **கௌரவம்படும்படியாகவும்** அவருடைய மகிமை விளங்கும்படியாகவும் **செயல்பட** விரும்புகிறார். ஆகையால் **தினந்தோறும்** இடைவிடாத ஜெபத்தோடு உங்கள் வாழ்க்கையை அவர் கரத்தில் **ஒப்புக்** கொடுத்து அவருடைய **வசனத்தின் படி** ஜீவியுங்கள். அப்போது உங்கள் வாழ்வில் **புதுமையான,** ஆச்சரியமான காரியங்களைக் காண முடியும். உங்களை அறியாமலே வாழ்வின் மேன்மையையும் காணமுடியும். இன்றைய நாள் **ஜெயத்தின் நாள்!**


ஜெபம்

என் அருமையான பரிசுத்த தேவனே! மகாகௌரவமும், மகிமையும் பொருந்தினவரே. உங்கள் பிள்ளையாகிய என்னை உங்கள் நாமத்தை மகிமைப்படுத்த, கௌரவப்படுத்த, உங்கள் சித்தம் என்னில் நிறைவேறத்தக்கதாக என்னை ஆசீர்வதியுங்கள். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"என் நாமம் ஜாதிகளுக்குள்ளே பயங்கரமாயிருக்கும்; நான் மகத்துவமான ராஜா என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (மல்கியா 1:14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி 13 திங்கள்

## ஆபத்து நேரிடும் முன்னமே எங்களை பாதுகாக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
யோபு
அதி: 37 – 38

**"கர்த்தராகிய ஆண்டவர்: அந்த ஆலோசனை நிலைநிற்பதில்லை, அதின்படி சம்பவிப்பதுமில்லை;"** (ஏசாயா 7:7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இன்றைய தினம் உங்களுக்கு ***மன நிறைவையும் மகிழ்ச்சியையும்*** அளிக்கும்படியாக வாழ்த்துகிறேன். இலங்கையில் ***வசிக்கும்*** சகல ஜாதி ஜனங்களிலும் ***பெரும்பாலோர்*** தன் வாழ்வில் எதிர் காலத்தின் ***நிகழ்வுகள்,*** ஆசீர்வாதங்கள், ***பாதிப்புகள்,*** தடைகள், இன்னும் இது போன்ற அநேக காரியங்களை அறியும்படியாக வாஞ்சித்து ***சாஸ்த்திரங்கள்*** சொல்லப்படும் இடங்களுக்கு, குறி சொல்லுமிடம், ***மைவெளிச்சம்,*** மரித்த ஆவிகளிடம் பேசும்படியாக நேரம் ***ஜாதகம்*** கணிக்கும் இடங்களுக்குச் செல்ல ***விரைந்தோடுகிறார்கள்.*** இவைகளை மனிதர்கள் நாடி விரைந்தோடி தம்முடைய வாழ்க்கைப் ***பயணத்தை*** முன்னேற்றமடையச் செய்வதற்கு முற்பட்டாலும் அவர்களுடைய வாழ்க்கையில் ***அசம்பாவிதம் வீழ்ச்சி, முன்னேற்றத்தடைகள்*** ஏற்பட்டதன் பிறகே புரிந்துக் கொள்வார்கள். ஆயினும் இவ்வாறான காரியம் நடக்கும் முன்னமே இதைக்குறித்து அறிவித்து இதேமாதிரியான அசம்பாவிதங்கள் நடைபெறாத வண்ணம் தடுத்து நிறுத்தி காத்துக் கொள்ள ஒருவருமில்லை, ஒருவரும் முன்வரமாட்டார்கள்.

தேவ பிள்ளைகளே! நீங்கள் கவலைப்படாதிருங்கள் இன்றைய தினம் இந்த ***ஜீவ மன்னா*** நாளாந்த தேவ செய்தியை வாசிக்கும் நீங்கள் ***விசேஷித்தமானவர்களே!*** ஏனெனில் தமது ***சொந்த பிள்ளையாக*** உங்களை ***தெரிந்துக் கொண்ட படைப்பின்*** தேவனான பரமபிதா உங்களது எதிர்கால வாழ்வில் ***தடைகள், வீழ்ச்சிகள்*** ஏற்படாத வண்ணம் முன் கூட்டியே உங்களுக்கு அறியத்தந்து அவற்றிலிருந்து உங்களை விடுவிக்கும்படியாக ***கிரியை*** செய்கிற தேவனாயிருக்கிறார். அவர் மகா ***வல்லமையுள்ளவர்.*** எமக்கு தீங்கு நேரிடுவதற்கு முன்பதாகவே அவற்றை எங்களுக்கு வெளிப்படுத்தி எம்மை ***பாதுகாக்கும்*** வேளைகளில் எமது ***விசுவாசம் பெலப்படும்படியாக*** சில ***சோதனைகள்*** ஏற்பட அனுமதியளிக்கிறார். ஒருவருடைய அழிவை விரும்பாத கிருபையின் கர்த்தர் தாமே சகல தேவ பிள்ளைகளும் தமது ***அனுக்கிரகத்தின்*** மூலம் நன்மைகளை பெறும்படி ***செயலாற்றுகிறவராயிருக்கிறார்.***

அருமையானவர்களே! ஆவியானவராக உங்கள் உள்ளத்தில் ***வாசம் பண்ணும்*** தேவன் தாமே ***ஆபத்து*** ஏற்படும் முன்னரே உங்களுக்கு முன் ***அறிவிப்பு*** செய்துவிடுவார். அல்லது ஆபத்து வேளையில் உங்களுக்கு ***அனுகூலமாக*** இருந்து ***துணை*** புரிந்து விடுவிக்க வல்லவராயிருக்கிறார் அல்லவா? சில வேளைகளில் தேவன் ***ஆபத்தான*** சமயங்களில் முன்னறிவிக்காவிட்டாலும் உங்களுக்கு வரும் ***ஆபத்துக்களை*** தடுத்து நிறுத்த ***வல்லவராயிருக்கிறார்.*** இன்றும் அவர் உங்களோடிருக்கிறார். இன்றைய ***நாள் ஜெயத்தின் நாள்!***



ஜெபம்

சதாகாலங்களிலும் தேவனே! இன்றும் நீங்கள் என்னோடிருக்கிறவராக இருக்கிறபடியால் நன்றி. ஆவியானவர் மூலமாக என்னை வழிநடத்தி எல்லா ஆபத்துக்களையும் விலக்கி காத்தருளும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல், நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்."
(சங்கீதம் 66:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 14
செவ்வாய்

## எம்மை சுமந்துச் செல்லும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
யோபு
அதி: 39 - 40

**"கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்,... "**
(சங்கீதம் 55:22)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிற ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் இன்பமான நாமத்தால் உங்களை ஆசீர்வதித்து வாழ்த்துகிறேன். இன்றைய **நாள் வெற்றிச் சிறந்த நல்லநாளே!** மானிட **உருவெடுத்து** இம் **மண்ணில்** அவதரித்த நீங்களும் நானும் **பாக்கியவான்களே!** ஏனெனில் அவருடைய சகல **படைப்புகள், மண்ணில்** வாழும் **உயிரினங்கள்,** வானத்துப் பறவைகள், சமுத்திரத்தின் **மச்சங்கள்,** யாவையும் **ஆளுகை** செய்யும் அதிகாரத்தை அவரின் படைப்பின் ஆரம்ப நாட்களிலேயே அவர் எங்களுக்கு வழங்கியிருக்கிறார். இன்றைய நாளிலும் இரட்சகரான தேவ குமாரன் **இயேசுகிறிஸ்துவின்** நாமத்தினால் நீங்களும் நானும் ஆளுகை செய்யக் கூடிய அதிகாரத்தை **பெற்றவர்களாகயிருக்கிறோம்.** ஆகையால் நாம் அனைவரும் பாக்கியமுள்ள **அதிர்ஷ்டசாலிகள்.**

தேவ பிள்ளைகளே! எம் ஆரம்ப வசனம் **சங்கீதம் 55:22**இல் **கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார்** என்பதாக கூறுகிறது. அவர் உங்களை **சுமந்துக் கொண்டு செல்லும்** தேவனாயிருக்கிறார் என்று உங்களால் எண்ணிப் பார்க்க முடியுமா? குழந்தைப் **பருவத்திலே** எம் பெற்றோர்கள் எந்நேரமும் எம்மை **தூக்கிச் சுமந்ததை** நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள் என நினைக்கிறேன். ஆனால் நீங்கள் வளர்ந்த பின்பு பெற்றோர்கள் உங்களைத் **தூக்கிச் சுமந்து** செல்வதில்லை என்பதும் நீங்கள் அறிந்ததே. ஆனால் உங்களை படைத்த பரம தகப்பன் நீங்கள் அறியாத **வண்ணம்** உங்களுக்கு தெரியாமலேயே உங்களை தூக்கிச் **சுமந்து** செல்கிறார். இதன் அர்த்தம் சிறு பிள்ளைகளை தூக்குவதற்கு சமமானது அல்ல! அப்படி சுமப்பது அல்ல. உங்கள்த் வாழ்வில் வரும் எல்லா துன்பச்சுமைகளையும் அவரிடம் கொடுக்கும் போது அவர் அவைகளை எங்களின் நிமித்தம் தாங்கி தூக்கிச் சுமந்து எம்மை இயேசு விடுவிக்கிறார்.

ஆகவே பிரியமானவர்களே! இன்றும் உங்களை வேதனைப்படுத்தும் துன்பச்சுமைகள், இருதயங்களை துக்கப்படுத்தும் வேளைகளும், உங்களை நிலை குலையச்செய்யும் எல்லா காரியங்களும் உங்கள் உள்ளத்தை துக்கமடையச் செய்கின்றதா? பரலோகத்தை நோக்கிப்பார்த்து கரங்களை ஏறெடுத்து, உங்களை படைத்த பரலோக தகப்பனை அழையுங்கள். உங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்புக்கொடுங்கள். அப்போது யாவற்றையும் பொறுப்பேற்று உங்கள் சுமைகளை தூக்கிச் சுமந்து உங்கள் பாரத்தை நீக்கி ஆதரிப்பார் உங்கள் அன்பு தேவ தகப்பன்! **இன்று ஜெயத்தின் நாள்!**



ஜெபம்

என் நேசத் தகப்பனே! என்னைத் தூக்கிச் சுமந்து செல்பவரே! உங்கள் வார்த்தையின்படி என் பாரத்தை என் வாழ்வின் சுமைகளை உங்களிடம் ஒப்படைக்கிறேன். நீங்கள் அவற்றை சுமந்து என்னை முன்னோக்கி நடத்திச் செல்லும் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (பரி: மத்தேயு 11:28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 15
புதன்

அநாதி தேவனின் ஆசீர்வாதம் அவரை நேசிப்பவர்களின் உரிமையாகும்!


இன்றைய வேதவாசிப்பு
யோபு
அதி: 41 – 42

**"என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்."**
(நீதிமொழிகள் 8:17)

எனக்கன்பான என் தேவ பிள்ளைகளே! என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவரும் என்றென்றைக்கும் ஜீவிக்கிறவருமான இயேசுகிறிஸ்துவின் உயர்ந்த நாமத்தினால் நன்மையான ஈவுகளுடன் கூடிய **நல்நாளைப் பெற்று மகிழும்படி** வாழ்த்துகின்றேன். தேவ **நியதியின்படி** உலகின் **அழிவினை** நோக்கி பூமி **சுழன்று** நகர்ந்துக் கொண்டிருக்கிறது. முடிவினை நோக்கி **பயணித்துக்** கொண்டிருக்கும் நாங்களோ உலகத்தையும் அதில் காணப்படும் யாவற்றையும் படைத்து ஆளுகை செய்யும் தேவனுடைய **சொந்த** ஜனங்களாக விளங்கும்படியான **வரப்பிரசாதத்தை** பெற்றுக் கொண்டவர்களானபடியால் நாம் மற்றைய ஜனங்களை விட பேறுபெற்ற விஷேசித்த **அதிர்ஷ்டசாலிகளாக** வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். **சத்திய** வசனமான வேதாகமம் எமக்கு **அருளப்பட்டிருக்கிறபடியால்** பூமியைக் குறித்தும், பூமியின் முடிவைக் குறித்தும் அதில் எழுதப்பட்டிருக்கிறது என்ன என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பூமியில் **வித்தியாசமான** காரியங்கள் நடக்கும் போது இப்படி நடப்பது எதனால் என்பதை நாம் தேவ வசனத்தின் மூலமாக அறியக்கூடியதாகவுள்ளது.

உங்கள் **இருதயம் கலங்காதிருப்பதாக!** உங்கள் வாழ்வில் ஏற்படுகின்றதான எல்லா **பிரச்சினைகள்,** நிந்தைகள், அவமானங்கள், சோதனைகள், வேதனைகள், துன்பங்கள் தோல்விகள், மனக்கலக்கங்கள் **சவால்கள்** இவைகள் உங்களை கடந்து வருகின்றது, என்பதை தேவன் நன்கு அறிந்தவராயிருக்கிறார். இருப்பினும் நீங்கள் அவரை **நெருங்கி** ஜீவிக்கிறபடியால், அவரின் **சொந்த பிள்ளையாக** இருப்பதால், எல்லா விதமான **பாதகமான விளைவுகள்** மத்தியிலும் தேவன் தாமே உங்களோடிருந்து உங்களை விடுவித்து காத்துக் கொள்ள **வல்லவராயிருக்கிறார்.** அவர் உங்கள் **ஆத்தும** நேசராக இருக்கிறபடியால் உங்கள் ஆத்துமாவைக் குறித்து அக்கறை உள்ளவராயிருக்கிறார். நீங்கள் **சந்திக்கும் உபத்திரவங்கள்** நிமித்தம் உங்களின் ஆத்துமா பாதிப்படையாதபடி, **பின்மாற்றமடையாதவாறு** உங்களுக்கு **நடுவராகவிருந்து** உங்களை விடுவிப்பார். உங்கள் **ஆத்துமா** வாழ்வது போல் நீங்கள் எல்லாவற்றிலும் சுகமாய் வாழ வேண்டுமென்பதே அவரது விருப்பம். உலகம் **அழிவினை** நோக்கி கடந்து சென்றாலும் மனிதனுடைய ஆத்துமா **அழிந்து** போகாமல் காத்து பரலோகம் கொண்டு செல்வதே பரலோக பிதாவின் விருப்பமும், **சித்தமுமாயிருக்கிறது.** அதற்காகவே இரவுபகலுமாக உங்களை **கண்ணின்மணிபோல்** காத்து வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! உங்கள் **எதிராளியான** சாத்தான் உங்களை பின்மாற்றமடையச் செய்ய **இடமளிக்க** வேண்டாம். நீங்கள் **ஆவியிலே விழித்திருந்து** உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். எல்லா **சோதனைகளினின்றும் விழிப்புணர்வோடு** ஜெயத்தை பெற்றுக் கொள்ளுங்கள் நீங்கள் தினந்தோறும் **ஜெபித்து** தேவனுடைய உன்னதமான அன்பின் அரவணைப்புக்குள் கிட்டிச் சேர்ந்து ஆசீர்வாதங்களோடு கூடிய வாழ்வை பெற்றுக் கொள்ளுங்கள். இன்றைய நாள் **ஜெயத்தின் நாள்!**



ஜெபம்

என் தேவனாகிய கர்த்தாவே! எம்மை நேசித்து உம் அண்டையில் என்னை சேர்த்து அணைத்துக் கொள்ளுங்கள். உங்களை விட்டு தூரப் போக கிரியைச் செய்யும் சாத்தானின் சோதனைகளின்று விலக்கி காத்து, சாத்தானின் சோதனைகளை முறியடித்து ஜெயம் பெற்று சாத்தானின் சகல அதிகாரங்களையும் மேற்கொள்ள என்னை வல்லமையால், அபிஷேகத்தால் நிரப்பி ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"எனக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனோ, தன் ஆத்துமாவைச் சேதப்படுத்துகிறான்; என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள் என்று சொல்லுகிறது."
(நீதிமொழிகள் 8:36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 16
வியாழன்

பூச்சக்கரம் முழுவதையும் ஒழுங்குபடுத்தின தேவன் உங்களோடு !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 01 – 02

"...பூமியின்மேல் மனுஷனுக்கு அதிகாரம்கொடுத்தவர் யார்? பூச்சக்கரம் முழுதையும் ஒழுங்குப்படுத்தினவர் யார்? " (யோபு 34:13)

அன்புக்குரிய தேவ ஜனங்களே! தன்னையே எமக்காக அர்ப்பணித்து ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் மகத்தான நாமத்தினால் இன்று உங்களுக்கு **வெற்றிகரமான நாளாக வேண்டுமென வாழ்த்துகிறேன்.** உலகில் **ஜீவிக்கின்ற** பல்வேறுப்பட்ட மனித **ஜாதிகளின்** மத்தியில் நீங்களும், நானும் மிக **அதிர்ஷ்டகாரர்களே.** ஏனென்றால் உலகில் வாழும் சகல ஜாதிகளின் மத்தியில் **பரலோகத்தில்** வாசம் பண்ணும் உருவாக்கும் தேவனின் **சொந்த பிள்ளைகளாக** நாங்கள் **பாக்கியவான்களாக** இருக்கின்றோம்.

தேவ பிள்ளைகளே! ஆனாலும் அந்த பாக்கியம் எமக்குக் கிடைத்தது நாங்கள் செய்த **நன்மைகள்** நிமித்தமாகவோ, அல்லது **நீதியின்** காரணமாகவோ அல்ல. **பரலோக** தேவ பிதாவின் சுய **பிரியமானது** எங்கள் பேரில் **நிறைவேற்றப்படுவதனாலாகும்.** ஏனென்றால் நாங்கள் தேவனை அறிந்திருக்கவில்லை. நாங்கள் தேவனைத் தெரிந்துக் **கொள்ளவில்லை தேவன்** பரலோகத்தில் வாசம் பண்ணுகிறார். நாங்கள் பூலோத்தில் வாழ்கின்ற **சிறு மனிதனாவோம்.** நாம் ஒவ்வொருவரும் தேவனின் சிருஷ்டிப்பு என்பதாலும், தேவன் எம்மைத் **தெரிந்துக் கொண்டார்.** மேற் கூறப்பட்ட வேதாகம வசனத்தில் எழுதப்பட்டுள்ளதாவது **பூமியின் மேல் மனுஷனுக்கு அதிகாரம் கொடுத்தவர் யார்? இப்பூவுலகை ஒழுங்கு படுத்தினவர் யார்?** என்றாகும். தேவனே முழு உலகினையும் படைத்தவர் என்பது அந்த **தேவ வசனத்தில்** புலனாகின்றது. **சங்கீதம் 148:5,6**இல் அவர் **கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது.** அவர் அவைகளை என்றைக்குமுள்ள **சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார்.** மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு **நியமித்தார்** என்பதாக கூறப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருக்கக்கட்டும்!** இன்றைய நாளில் என் வாழ்க்கைக்கு முகங் கொடுப்பதெப்படி? என நினைத்து **கவலைப்படாதீர்கள்.** இன்றைய நாள் பிரச்சினைகளைக் குறித்து கவலைப்படாதீர்கள். தேவன் பேரில் உங்கள் சுமைகளை ஒப்புவித்த பின்னர் நீங்கள் கவலைப்படுவது ஏன்? உங்களை தனது உரிமையான **சொந்த பிள்ளையாக** தேர்ந்தெடுத்த தேவ பிதாவானவர் முழு உலகத்தையும் அமைத்த **தேவன்** உங்களை மறப்பாரா? உங்கள் **உள்ளத்தை** தேவனுக்கு அர்ப்பணித்து **விசுவாசத்தோடு ஜெபம்** செய்யுங்கள். தேவன் உங்களுக்கு **ஒத்தாசை** புரிவார். ஆசீர்வதிப்பார். **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! முழு உலகத்தையும் படைத்த தேவன். உங்கள் வாயின் கட்டளைகளில் எல்லாம் உருவாக்கப்பட்டன. தேவனே உங்களால் கூடாதது ஒன்றுமில்லை. இன்றைய நாளிலும் என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் இனிய நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் தமது வார்த்தையைப் பூமியிலே அனுப்புகிறார்; அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது."
(சங்கீதம் 147:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 17
வெள்ளி

தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு அவர் சகலமும் நன்மையாகவே நடப்பிப்பார்!

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 03 – 04

**"...அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."**
(ரோமர் 8:28)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! உங்களை இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ***இன்றைய நாளில் சகலமும் நன்மையாகவே*** நடைபெற வேண்டுமென வாழ்த்துகிறேன். உலகில் வாழ்கின்ற எமக்கு எல்லா நாட்களும் ***சந்தோஷமான இனிமையான*** நாளாக இருக்குமென்று நினைக்க முடியாது. ஏனென்றால் இயேசுகிறிஸ்து ***பரி.யோவான் 16:33***இல் ***உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு.*** ஆனாலும் ***திடன் கொள்ளுங்கள்,*** நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். ஆகையால் இன்று உபத்திரவங்கள், சவால்கள், பிரச்சினைகள் என்பனவற்றிலிருந்து முகங்கொடுக்க நேரிட்டதா? நீங்கள் ***கலங்காதிருங்கள்!*** ஏனெனில் எல்லாவற்றிலும் வெற்றியைப் பெற்றுத்தரும் **இயேசுகிறிஸ்து** இன்றும் உங்களோடு **ஜீவிக்கின்றவராக** இருக்கின்றார்.

தேவ பிள்ளைகளே! உலக மனிதர்களுக்கும், இயேசுகிறிஸ்துவின் ஆவியைப் பெற்ற பிள்ளைகளுக்கும் ஒரே மாதிரியான **உபத்திரவங்கள்** ஏற்படுமாயின் தேவனின் பிள்ளைகளுக்குரிய **விஷேடத்** தன்மை யாது என நீங்கள் நினைக்கலாம். ஆனாலும் நீங்கள் ***கலங்காதிருங்கள்!*** ஏனென்றால் மேல் கூறப்பட்ட பிரதான வேதாகம வசனத்தில் எழுதப்பட்டுள்ளதாவது **தேவனை நேசிப்பவர்களுக்கு,** அப்படியானால் தேவனுடைய ***சுய விருப்பத்தின்படி, சொந்த தீர்மானத்தின்படி*** அழைக்கப்பட்டவர்களுக்கு, அனைத்தும் நன்மையாகவே நடக்கும் என்றாகும்.நீங்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள், சவால்கள், உபத்திரவங்கள், எவ்வளவு விசாலமாதாக, ஆழமானதாக இருப்பினும் ***எவ்வளவாயினும் உங்களை பாதிக்காது.*** நீங்கள் எல்லா வேளையிலும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் கூறி தேவனை நோக்கி ஜெபிக்கும் போது தேவன் உங்களுக்கு உதவி புரியும்படியாக துணையாய் நின்று **செயல்படுவார்.** உங்களின் உபத்திரவத்தின் போது பிரச்சினையின் போது நீங்கள் **தேவனைத்** தேடுகின்ற வேளையில் நீங்கள் தேவனிடம் அதிகமாய் **நெருங்கி** கிட்டிச் சேர்ந்து அவருடைய அன்பின் ஆழத்தை அனுபவிக்கின்றீர்கள்.

தேவ பிள்ளைகளே! அப்படியே உங்கள் தேவன் உபத்திரவத்தின் போது, பிரச்சினையின் போது, துன்பத்தின் போது, தேவனின் **அன்பை** ருசிக்கும்படியாக இன்னும் உங்களை ***கிட்டிச்*** சேர்த்துக் கொள்வாராக. நீங்கள் **தைரியமாயிருங்கள்.** இன்றும் தேவன் உங்களோடிருந்து எந்தவொரு ***தீமையும்*** உங்களை அணுகாத வண்ணம் நடப்பவைகள் அனைத்தையும் **நன்மையாக** மாற்றுவாராக இன்றை நாள் ***வெற்றிகரமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எனக்கு நன்மையான காரியங்களை நடப்பிக்கும் தேவன். மனிதர்கள் தீமை செய்ய முற்பட்டாலும் நீங்கள் அனைத்தையும் நன்மையாக மாற்றிவிடுங்கள். உங்கள் ஆசீர்வாதத்தால் என்னை நிரப்புங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறதுபோலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய்."
(பிரசங்கி 11:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 18
சனி

# தந்திரக்காரர்களின் உபாயங்களை செயலிழக்கச் செய்யும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 05 – 06

**"...தந்திரக்காரரின் கைகள் காரியத்தை முடிய நடத்தக்கூடாதபடிக்கு, அவர்களுடைய உபாயங்களை அவர் அபத்தமாக்குகிறார்."** (யோபு 5:12)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற எமது அன்பராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **இன்றைய நாளில் உங்களுக்கு தடையாகவிருந்த நற்காரியங்கள் யாவும்** தங்கு தடையின்றி நிறைவேற வேண்டுமென **வாழ்த்தி ஜெபிக்கிறேன்.** தேவனின் அழைப்பை பெற்ற மனிதர்களாகிய நாம் உலகில் வாசம் பண்ணும் மனிதர்கள் மத்தியில் **மிக அதிர்ஷ்டக்காரர்கள்.** நம்மைப் போன்ற மனிதர்களின் உள்ளத்தையோ, அவர்களின் **உள்ளத்தில்** இருக்கும் **நினைவுகளையோ** நம்மால் அறிந்துக் கொள்ள **முடியாது.** அவர்கள் சிரித்த முகத்தோடு எங்களோடு கதைத்தாலும் அவர்கள் **உள்மனதின் நினைவுகள் எப்படியானது?** என்பதை **நாமறியோம்.** ஆனாலும் எங்கள் தேவன் ஒவ்வொரு மனிதனதும் **உள்ளத்தையும், சிந்தனைகளையும்** அதின் வேகங்களையும் **அறிகின்றவர்.** அந்த தேவன் எங்களோடிருப்பதால் நாம் **அதிர்ஷ்டகாரர்கள்.**

தேவ பிள்ளைகளே! உங்கள் **உள்ளம் கலங்காதிருக்கட்டும்.** எங்களைச் சூழ்ந்துள்ள தினந்தோறும் சந்திக்கின்ற மனிதர்கள் வீண் வார்த்தைகள் அலம்பி, எங்களை **ஏமாற்றி** எங்களுக்கு விரோதமாக செயல்படுவதை நாம் அறிந்திராத பல சந்தர்ப்பங்களில் மனிதர்களின் பலவிதமான தந்திரம் நிறைந்த **வஞ்சனையான** செயல்களுக்கு நாம் அகப்படலாம். ஆனால் நீங்களும், நானும் **தேவன் முன்னிலையில் பரிசுத்தமான** வாழ்க்கை வாழ்வோமானால் தேவன் மனிதனின் **தந்திரங்களுக்கும், வஞ்சனைகளுக்கும்,** நாங்கள் அகப்படாதபடி அவை அனைத்திலுமிருந்து எம்மை **பாதுகாத்துக்** கொள்வார். **யோபு 5:12**இல் எழுதப்பட்டுள்ளதாவது **தந்திரக்காரர்களின் கைகள், காரியங்களை நடத்த முடியாதபடி அவர்களுடைய உபாயங்களை செயலிழக்கச் செய்கிறார்** என்றாகும். அதன் கருத்து தந்திரக்காரர்களை தேவன் **எதிர்க்கின்றார்** என்பதாகும். நீங்கள் தேவனுடைய **பாதுகாப்பை** பெற்றுக் கொள்ள வேண்டுமானால். நீங்கள் தேவனுக்கு பிரியமான பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும் ஏனென்றால் அவர் **நீதியுள்ள தேவன், உண்மையான தேவன்.** ஆகையால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், **நீதிமானாகிய பரிசுத்தமான மனிதனை** தேவன் **கைவிடவே மாட்டார்.**

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் உங்களுக்கு விரோதமாக எழும்பும் மனிதர்களின் **உபாயங்கள்** அனைத்தையும் தேவன் **செயலிழக்கச்** செய்வதோடு உங்களை அவைகளின்று விடுவித்துக் காத்துக் கொள்வார். உங்களை அனைத்திலிருந்தும் மீட்டுக் கொள்வாராக! உங்களுக்கு **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் தந்திரக்காரர்களின் செயல்கள் நிறைவேறாத வண்ணம் அவர்களது உபாயங்களை செயலிழக்கச் செய்யுங்கள். உங்களது பாதுகாப்பு எனக்கு கிடைக்கும்படியாக எனக்கு பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கு உதவி செய்யுங்கள்.
இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது."
(1 கொரிந்தியர் 3:19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 19
ஞாயிறு

## நீங்கள் இயேசுவுக்குள் பலன் கொடுக்கும் திராட்சைக் கொடியா?

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 07 – 08

**"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்;..."**
(பரி.யோவான் 15:5)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு **நலமிகு நாளாக வேண்டுமென வாழ்த்துகிறேன்.** உலகில் வாழ்கின்ற அநேக மனிதர்கள் **உண்மையான தெய்வம்** இருக்கின்றார் எனத் தெரியாமல் இருக்கின்றார்கள். **மனிதர்கள்** எப்படி உருவாக்கப்பட்டார்கள் என்றும் **உலகம்** எவ்வாறு உருவாக்கப்பட்டது? என்றும் அவர்கள் **அறியாதிருக்கிறார்கள்.** இவ்வண்ணமே மனிதர்கள் தம்மால் தீர்த்துக் கொள்ள முடியாத சிக்கல்கள், பிரச்சினைகள் உருவாகின்ற வேளைகளில் அவைகளுக்கு பரிகாரம் பெறும்படியாக **பல வழிகளைத்** தேடி பெரும்பாலான உபத்திரவங்கள், சோர்வுகளுக்குள்ளாகி இருக்கின்றார்கள்.

தேவ பிள்ளைகளே! **ஜீவ மன்னா தின தியானங்கள்** வாசிக்கின்ற நீங்கள் **அதிர்ஷ்டக்காரர்கள்.** ஏனெனில் நீங்கள் இப்போதும் **இரட்சகராகிய இயேசுகிறிஸ்து** உங்கள் வாழ்வின் **இரட்சகர்** என்பதனை முழு உள்ளத்திலும் ஏற்று, உங்கள் வாழ்வில் இருந்த சகல பாவங்களுக்கும் **பாவ மன்னிப்பைப்** பெற்று **பரிசுத்தமாக** இருக்கின்றீர்கள். உலகில் அநேகருக்கு கிடைக்காத **வரப்பிரசாதத்தைப்** பெற்ற நீங்கள் **பாக்கியவான்கள்.** மேற் கூறப்பட்ட வேதாகம வசனத்தில் எங்கள் **இரட்சகர்** இயேசுகிறஸ்துவே **திராட்சைக் கொடி** என்றும் நாம் அதின் கிளைகள் என்று கூறப்பட்டுள்ளது. **நாங்கள் தேவனிலும் தேவன் எங்களிலும் நிலைத்திருந்தால் நாங்கள் மிகுந்த கனி கொடுப்போம்** என்ற கூறப்பட்டுள்ளது. கனிகளைக் கொடுப்பது என்பதன் கருத்து **நல்ல ஆவிக்குரிய பிள்ளையாக** ஜீவித்தல் என்பதாகும். உங்கள் மனசாட்சிக்கு அறிய நீங்கள் எவருக்காகிலும் தீமை செய்யாமல் உண்மையான தேவ பிள்ளையாக வாழ்வதை குறித்தேயாகும். அப்படியானால் பரிசுத்த வேதாகமத்தில் **கலாத்தியர் 5:22,23**இல் எழுதியுள்ள **ஆவியின் கனிகள்** "9" (ஒன்பது) உங்கள் வாழ்க்கையில் காணப்பட வேண்டும். அவைகள் **அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்** என்பவைகளாகும்.

தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்து மெய்யான திராட்சைச்செடி.** என் பிதா திராட்சைத் / தோட்டக்காரர் என்றும் **யோவான் 15:1**இல் கூறியிருக்கிறார். ஆகையால் இயேசுகிறிஸ்துவுக்குள் கனி கொடுப்பது **பிதாவின் பிரியமானபடியால்** நீங்கள் **மிகுந்த கனி கொடுக்கும்** திராட்சைக்கொடியின் பசுமையான **கிளைகளாகும்படியாக** இயேசுகிறிஸ்துவுக்குள் தீவிரமாக செயற்படுங்கள். **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் மகனான இயேசுகிறிஸ்து உண்மையான திராட்சை கொடியாவார். நான் தேவனுக்குள் வாழுவதனால் நான் அதன் கிளையாவேன். தேவனே திராட்சைக் கொடியில் ஆகாரங்களைக் பெற்று அதிகமதிகமாக பலன் பெற ஆசீர்வதியுங்கள் இயேசுவின் நாமத்தில்,
-ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்."
(பரி.யோவான் 15:4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 20
திங்கள்

**உங்களுக்கு விரோதமாக எழும்பும் எந்தவொரு ஆயுதமும் வாய்க்காது!**

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம் அதி: 09 – 10

**"...உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது."** (சங்கீதம் 91:7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் இன்று இனிய காலைப் பொழுதாகும்படியாக வாழ்த்தி பிரார்த்திக்கின்றேன். பரிசுத்த வேதாகமத்தில் **பரி.யோவான் 1:12**இல் தேவ வசனத்தின்படி நீங்கள் தேவனின் பிள்ளைகளாக மகன்,மகள் என்ற உரிமையை தேவனுக்கு கொடுத்துள்ளமையால் உலகில் சொந்தம் அதி விஷேடமானது. அது உங்களுக்கு கிடைத்தது உங்கள் அன்புமிகு தேவனின் பிரியத்தின்படியே ஆகும்.

தேவ பிள்ளைகளே! நான் சென்ற மாதம் இந்தியாவில் **தூத்துக்குடி** எனும் பிரதேசத்தில் நற்செய்திக் கூட்டம் காரியமாகச் சென்றிருந்தேன். அப்பிரதேசத்தில் தாங்கிக் கொள்ள முடியாத மிகவும் உஷ்ணத்தோடு வறட்சியான கால நிலையாகக் காணப்பட்டது. 10 மாதமாக அந்தப் பிரதேசத்தில் மழையே இல்லாத காரணத்தினால் வெப்பம் அதிகரித்துள்ளது. ஆனால் நான் அங்கு சென்ற நாளிலே மாலைப் பொழுதில் வானம் இருளடைந்தது **பெருமழை** அந்தப் பிரதேசத்தில் பெய்தது. நான் சில நாட்கள் அங்கே தங்கியதோடு சில நற்செய்திக் கூட்டங்களை மாலைப் பொழுதிலே நடத்தினேன். அந்த கூட்டங்களுக்கு மழை எந்தவித தடையையும் உண்டு பண்ணாதபடி தேவன் நல்ல சுகமான ஒரு காலநிலயையும் அப்பிரதேசத்தில் ஏற்படுத்திக் கொடுத்தார். தேவனின் கருணையானது தனது பிள்ளைகளுக்கு எவ்வளவாக கிடைக்கின்றதென்பதை நீங்களும் விசுவாசியுங்கள். ஏனென்றால் தேவன் முழு உலகத்தையும் படைத்த சிருஷ்டிப்பின் மகத்துவமானவர்.

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்டுள்ள **சங்கீதம் 91:7**இல் பரிசுத்த வேதாகம வசனத்தில் எழுதப்பட்டுள்ளதாவது உன் பக்கத்தில் ஆயிரம் பேரும் உன் வலது பக்கத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை நெருங்கி வராது என்றாகும். இந்த வேத வசனத்தின் கருத்தானது உங்களுக்கு விரோதமாக எவ்வளவாக மனிதர்கள் சாத்தானின் துஷ்ட சேனைகள் எழும்பினாலும் அவை ஒன்றும் உங்களை அணுகாது என்றாகும். ஏனென்றால் உங்கள் தேவனை தோல்வியுறச் செய்ய, அவருக்கு விரோதமாக எழும்பி நிற்க யாருக்கும் வல்லமையோ, பெலனோ கிடையாது. தேவன் நமது சர்வ வல்லமையுடைய பராக்கிரமத்தின் தேவனாவார். நீங்கள் பயப்படாதீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். இஸ்ரவேல் ஜனங்களை யோர்தானை, செங்கடலை, அற்புதவண்ணமாக கடக்கச் செய்த தேவன் உங்களோடு! இன்று **வெற்றிகரமான நாள்!**




என் தேவனே! நீங்கள் சர்வ வல்லமையுடைய தேவன் நீங்கள் என்னோடிருப்பதால் ஸ்தோத்திரம். இன்றும் எங்களுக்கு விரோதமாக அநேக மனிதர்கள் சாத்தானின் துஷ்ட சேனைகள் எழும்பி நிற்பதை அறிகின்றேன். தேவனே என்னைக் காப்பாற்றுங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உங்களில் ஒருவன் ஆயிரம்பேரைத் துரத்துவான். உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி, அவர்தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுகிறார்." (யோசுவா 23:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி 21 செவ்வாய்

நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருப்பதே என் பிரியமாயிருக்கிறது.!

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம் அதி: 11 – 12

**"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்."**
(பரி.யோவான் 14:3)

அருமையான தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் ***உன்னதமான நாமத்தில் மகிழ்ச்சிகரமான நாளாக வேண்டுமென*** உங்கள் அனைவரையும் வாழ்த்தி உங்களுக்காக ***பிரார்த்திக்கின்றேன்.*** இக்காலத்தில் ***ஜீவிக்கின்ற*** எல்லா ***மனிதரிடமும்*** ஆடம்பரம், பெருமை, மனிதர்களை ***மதிக்காமை,*** ஆகிய பலவிதமான ***செயல்களைக்*** காண்கிறோம். எங்களைத் தனது ***சொந்த ஜனங்களாக*** தெரிவு செய்து வேறுபடுத்திய எமது பரலோகப்பிதா, ***சிருஷ்டிப்பின்*** தேவனானவர் ஒருபோதும் நாமிருக்கும் ***நிலையை*** நிறுத்துப் பார்க்காத தேவனாவார்.

தேவ பிள்ளைகளே! தேவனாகிய கர்த்தர் ***சிருஷ்டித்த*** மனிதர்கள் அவரது ***வசனங்களுக்கு*** கீழ்படியாதபடியால் உலகில் ***பாவம் நுழைந்ததெனினும் பாவங்களினால்*** மனிதர்கள் ***அழிந்து*** போவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாமல் அவர்களை ***பாவங்களிலிருந்து*** மீட்க தேவன் ***செயலாற்றினார்.*** அதன் பலனாகவே **ஒரே பேறான** குமாரனான இயேசுகிறிஸ்துவை, ஜீவனை ***பலியாக*** ஒப்புக் கொடுக்க இவ்வுலகிற்கு அனுப்பினார். இயேசுகிறிஸ்து எங்களுக்காக பலியாகி தமது ***சரீரத்திலிருந்து வழிந்த இரத்தத்தினால்*** எங்கள் அனைத்து ***பாவங்களிலிருந்தும்*** எங்களைக் ***கழுவி*** பரிசுத்தப்படுத்தினார். அது மாத்திரமல்லாது மேற் கூறப்பட்ட பிரதான ***வேதாகம*** வசனத்தின்படி எங்களை அவர் இருக்கும் இடத்திற்கு கொண்டு செல்லவும் ***கிரியை*** செய்தார். அந்த ***தேவ வசனத்தில்*** இயேசுகிறிஸ்து எங்களுக்குக் கூறுகிறதாவது நான் போய் உங்களுக்காக ***ஸ்தலத்தை*** ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன் என்றாகும்.

தேவ பிள்ளைகளே! இவ்வுலகில் ***பலவிதமான*** பாவங்களைச் செய்து ***அநீதியாக*** வாழ்ந்த எம்மை இயேசுகிறிஸ்துவின் ***இரத்தத்தில் கழுவி*** சுத்தப்படுத்தி தேவ குமாரன் இருக்கின்ற இடத்தில் எம்மையும் வைத்துக் கொள்ள தேவன் ***செயல்படுவது*** எவ்வளவு உன்னதமானது. உங்கள் ***உள்ளம் கலங்காதிருப்பதாக!*** எங்கள் தேவனுக்கு முன் ***அன்பு*** செய்து, அவருக்கு ***கீழ்படிந்து*** வாழ்வீர்களாயின் எங்களுக்குக் கூடாக ***வெற்றிகரமான,*** பிரமிக்கத்தக்கதான காரியங்களை நிறைவேற்றுவார். ***இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாளாகட்டும்!***

ஜெபம்

என் தேவனே! உங்கள் மகனை உலகத்திற்கு அனுப்பியது என்னை நீதிமானாக்கி என்னை உங்களிடம் கொண்டு வருவதற்கு என்பதை நான் அறிந்திருக்கின்றேன். உங்கள் உயர்ந்த திட்டத்தை எனக்குள் நிறைவேற்றியருளும். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்."
(பரி.யோவான் 6:40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 22
புதன்

# உங்கள் போராட்டங்களை நிர்மூலப்படுத்தும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம் அதி: 13 – 14

**"எருசலேமுடன் பட்சமாய்ப்பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்."**
(ஏசாயா 40:2)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் மகத்துவமான நாமத்தினால் **இன்றைய தினத்தில் சந்தோஷம், சமாதானம், சுகத்தினால் நிறைந்திருக்கும்படியாக வாழ்த்தி பிரார்த்திக்கின்றேன்.** சூரிய உதயத்தோடு **புதிதான தினமதிலே** கால் வைத்த உங்கள் உள்ளமானது இன்றைய நாளில் என் வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு, சவால்களுக்கு, எப்படி முகங்கொடுப்பேன் என்றும் எப்படி பிரச்சினைகளைத் **தீர்த்துக் கொள்வேன்** என்றும் எண்ணி அங்கலாய்க்கின்றீர்களா? ஆனாலும் **உள்ளம் கலங்காதிருங்கள்**!

தேவ பிள்ளைகளே! உங்கள் **பிரச்சினைகள்** துன்பங்கள், சவால்கள், கண்ணீர் காரணமாக உங்கள் உள்ளமானது வேதனைக்குள்ளாகி **யுத்தக்களமாக** இருந்தாலும் நீங்கள் பயப்படாதிருங்கள் இன்றைய நாளில் **ஏசாயா 40:2**இல் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கூறுவதாவது, உங்கள் **போர்** முடிந்தது, உங்கள் அக்கிரமங்கள் நிவர்த்தியாயிற்று, **உங்கள் பாவங்களுக்காக** நீங்கள் **இரட்டிப்பான தண்டனைகளை** அடைந்து தீர்ந்தாயிற்று என்பதாகும். அதன் அர்த்தமாவது உங்கள் தேவனாகிய கர்த்தர் இப்பொழுது உங்களை **ஆறுதல்படுத்தப்** போகிறார் என்பதாகும். ஏனென்றால் **ஏசாயா 40:1**இல் எழுதியிருப்பதாவது என் ஜனத்தை **ஆற்றுங்கள், தேற்றுங்கள்,** என்பதாகும். ஆகையால் உங்களை **சிருஷ்டித்த தேவன்** பேரில் விசுவாசங் கொள்ளுங்கள். உங்கள் உள்ளத்தில் எழும்பும் **போராட்டங்கள், யுத்தங்களுக்கு** இன்றோடு ஒரு முடிவைத் தந்து உங்களைத் **தேற்றுவதற்கு** இயேசுகிறிஸ்துவால் முடியும். ஆனால் உங்கள் யுத்தங்களை மாமிச பிரகாரமாக வெற்றிக்கொள்ள முயற்சி செய்யாதீர்கள். உங்கள் போராட்டம் **மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல** என்றும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் அவைகளுக்கு **விரோதமாக** என்று **எபேசியர் 6:12**இல் எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! ஆகையால் முதலில் உங்கள் **உள்ளத்தில்** இருக்கும் போராட்டங்களை ஒரு முடிவிற்கு கொண்டுவர **முயற்சி செய்யுங்கள். சத்துருவானவன்** உங்கள் **உள்ளத்தை மானசீகமான** போராட்டத்திற்குட்படுத்தி **அதைரியப்படுத்தி** உங்கள் ஜெப வாழ்விற்கு தடைகள் உண்டு பண்ண **இடங்கொடுக்காதீர்கள்.** நீங்கள் ஜெபிக்கும் போது தேவன் தமது **தேவ ஆவியால்** உங்களை நிரப்பி **உள்ளத்தில்** சாத்தான் வைத்திருக்கும் அனைத்து கட்டுகளையும் தேவன் **நிர்மூலப்படுத்துவாராக! உங்களுக்கு வெற்றிகரமான நாள்!**


ஜெபம்

என் தேவனே! நீங்கள் என் வாழ்க்கையில் உருவாகியிருக்கும் போராட்டங்களை நிர்மூலப்படுத்தும் தேவன் என்றபடியால் ஸ்தோத்திரம். பிதாவே சாத்தான் என் உள்ளத்தில் ஏற்படுத்தும் போராட்டங்களை நிர்மூலப்படுத்துங்கள் என் உள்ளத்திற்கு விடுதலை தாருங்கள். இயேசுவின் நாமத்தில் ~ஆமென்~

வேத வார்த்தை
"...அப்பொழுது அவனுடைய நுகம் அவர்கள்மேலிருந்து விலகி, அவனுடைய சுமை அவர்கள் தோளிலிருந்து நீங்கும்." (ஏசாயா 14:25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி **23**
வியாழன்

**நாங்கள் நற்கனியைக் கொடுத்து அதில் நிலைத்திருப்பதே தேவனின் பிரியமாயிருக்கிறது !**

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 15 – 16

**"...நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்."** (யோவான் 15:16)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **இன்றும் உங்களுக்கு இனிமையான நன்மையான நாளாக வேண்டுமென வாழ்த்தி பிரார்த்திக்கின்றேன்.** இவ்வுலகில் வாழும் எல்லா மனிதருக்கும் **உபத்திரவங்கள்** வருகின்றன. ஆனாலும் **ஜீவிக்கின்ற, இரட்சகர், சர்வ வல்லமையுள்ள** தேவ பிதாவானவரைக் குறித்து அறிந்திருக்கின்ற தேவனை ஏற்றுக் கொண்ட அனைவருக்கும் தேவனின் அளவற்ற **இரக்கமும், அநுக்கிரகமும்** இடைவிடாமல் கிடைக்குமென்பதை உங்களுக்கு கூறுகின்றேன். ஏனென்றால் தேவனின் குமாரனான **இயேசுகிறிஸ்துவுக் கூடாக** பிதாவிடம் வருகின்ற அனைவரையும் **பிதாவானவர் ஆசீர்வதிப்பாராக!**

தேவ பிள்ளைகளே! **11 வருடக் காலமாக** கேஸ்ட்ரிக் **நோயின்** காரணமாக நான் அதிகமாக வருத்தப்பட்டேன் சத்திரச்சிகிச்சை செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இறுதியில் எனது **நண்பரொருவர்** என்னை **ஆவிக்குரிய** சபைக்குக் கூட்டிச் சென்ற போது விருப்பமின்றி நான் இயேசுவை நோக்கி **ஜெபித்து** என் **நோய்க்கு சுகத்தைக்** கேட்டேன். **தேவன் என் ஜெபத்தைக்** கேட்டு **11 வருட கேஸ்ட்ரிக் நோயை சுகப்படுத்தினார்.** இன்றைக்கும் தேவன் அதே வண்ணமாகவே இருக்கின்றார். நான் சுகத்தைப் பெற்று இப்பொழுது **30 வருடங்கள்** கடந்து சென்று விட்டதோடு இன்றும் நான் **சுகத்தோடு ஜீவிப்பது** தேவனின் **கிருபையே**யாகும். அதுமாத்திரமின்றி தேவனால் தேவ ஊழியக்காரனாக நியமிக்கப்பட்டிருக்கும் நான் தேவனிடம் வருகின்ற **ஆயிரக்கணக்கான** மனிதர்களுக்காக நான் அவரின் முன்பாக **உபவாசத்தோடு** மத்தியஸ்தம் பண்ணி ஜெபம் செய்து அவர்களை வசனத்தால் பெலப்படுத்தி சுகத்தை, **ஆசீர்வாதங்களைப் பெற்றுக்** கொடுக்கிறேன். ஆகையால் எனக்கு மாத்திரமின்றி தேவனிடம் வருகின்ற யாராக இருப்பினும் இன்றும் அவர் ஆசீர்வதிக்கின்றார்.

தேவ பிள்ளைகளே! உங்கள் **உள்ளம் கலங்காதிருப்பதாக!** நீங்கள் தேவ வசனத்தைக் கேட்டு எவ்வேளையிலும் **வேத வசனங்களை** வாசித்து அதன்படி உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் தேவ **வசனத்தின்படி** நீங்கள் வாழ்வீர்களாயின் நீங்கள் கனி கொடுக்கும் **தேவ பிள்ளையாக** மாறுவதோடு நீங்கள் இயேசுவின் நாமத்தில் **பிதாவானவரிடம்** கேட்கும் எதுவாக இருப்பினும் அவைகள் உங்களுக்கு கிடைக்கும். **தைரியமாக இருங்கள்.** உங்கள் வாழ்க்கையில் **தோல்வியான நிகழ்ச்சிகளைக்** குறித்து **சிந்தித்து கவலைப்படாதீர்கள். இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்களிடம் எதைக் கேட்டாலும் நீங்கள் தருவீர்களென நான் அறிந்திருக்கிறேன். ஆகையால் உங்கள் பிரியத்தின்படி ஜீவித்து உங்களிடம் ஆசீர்வாதம் பெற கிருபை செய்யுங்கள் இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." (பரி.யோவான் 15:7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 24
வெள்ளி

# தன் வார்த்தைக்கு கீழ்படியாத யோனாவுக்கு மனமிரங்கிய தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 17 – 18

"...தேவனாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டு, அதை அவன்மேல் ஓங்கி வளரப்பண்ணினார்; அந்த ஆமணக்கின்மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான்."
(யோனா 4:6)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் **நாமத்தில் புதிதான கிருபையிலே மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** மகத்துவமான **சர்வவல்லமையுடைய** தேவ பிதாவானவரைக் குறித்து நீங்கள் அறிந்து கொள்ளவும், தேவனைக் குறித்ததான **அறிவுகளைப்** பெற்றுக் கொள்ளவும் **தின மன்னா** தியானங்களுக்கூடாக தேவ வசனங்களை வாசிக்க **வரப்பிரசாதத்தைப்** பெற்ற நீங்கள் மிகவும் **பாக்கியவான்களாவீர்கள்.** ஏனெனில் மனிதர்களை இம்மாத்திரம் நேசிக்கின்ற அவர்களுடன் இவ்வளவாக **அன்போடு** கிட்டி நெருங்கியிருக்கும் தேவனை மனிதன் அறியாமை மிகவும் **துர்பாக்கியம் எனலாம்.**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் நீங்கள் **கலங்காதிருங்கள்!** ஏனென்றால் நீங்கள் இன்னும் **தினமன்னா** தியானங்களுக்கூடாக தேவனைப் பற்றி அதிகமாக கற்றுக் கொள்வதனால் உங்களைப் போன்று **ஆசீர்வாதம்** பெற்றவர்கள் யாருமில்லை. யோனா தேவனுக்கு **கீழ்ப்படியாதவர்.** ஏனெனில் அவருக்கு **நினிவே நகரத்திற்குச்** சென்று அதற்கு விரோதமாக **பிரசங்கிக்கும்படியாக** தேவனுடைய வசனம் **யோனாவிற்கு** தேவனால் கொடுக்கப்பட்டது. ஆனாலும் அவர் தேவனுடைய **வசனத்தை** பொருட்படுத்தாது, அதற்கு **கீழ்ப்படியாது** கர்த்தருடைய **சமுகத்தினின்று** விலகி **தர்ஷீசுக்கு** ஓடிப் போகும்படி எழுந்து கப்பலில் ஏறினார். ஆனால் தேவன் சமுத்திரத்தின் **பெருங்காற்றையும், கடல் கொந்தளிப்பையும்** உண்டாக்கினார். **யோனா** சென்ற **கப்பல் மாலுமி,** மனிதர்கள் மூலமாக அவரை கடலுக்குள் போட்டு விடும்படியாகச் செய்வித்தார். அதன் பிறகு யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனை கர்த்தர் ஆயத்தப்படுத்தி அந்த **மீன் வயிற்றிலே** யோனா **இராப்பகல் மூன்று நாட்கள்** இருக்கும்படியாகச் செய்த வேளையில் அவன் கர்த்தரை நோக்கி **விண்ணப்பஞ்** செய்தார். தேவன் இரண்டாவது முறையும் நினிவே நகரத்துக்குச் சென்று நான் **கற்பிக்கும் வார்த்தையை** அதற்கு **விரோதமாக பிரசங்கி** என்றார். அந்தப்படியே யோனா **நினிவே** நகருக்குச் சென்றார். அங்கே **நகரவாசிகளுக்கு** தேவனின் வார்த்தையை வெளிப்படுத்தி **நகரத்துக்குக்** கிழக்கே போய் ஒரு **குடிசையைப்** போட்டு நினிவே **நகரத்திற்கு சம்பவிக்கப்** போகிறதை பார்க்கும்படியாக **அமர்ந்திருந்தார்.**

தேவ பிள்ளைகளே! தேவ **வசனத்திற்கு கீழ்படியாத யோனாவுக்குத்** தலையின் மேல் **நிழலுண்டாயிருக்கவும்,** அவருடைய **மனமடிவுக்கு** நீங்கலாக்க கர்த்தர் ஒரு **ஆமணக்குச் செடியை முளைக்கக்** கட்டளையிட்ட உங்கள் தேவன் மிகவும் **கருணை, இரக்கம், அன்பு நிறைந்த பொறுமையின்** தேவனானவர். அந்த தேவன் இன்றும் உங்களோடு! உங்களுக்கு **வெற்றிகரமான நாள்!**



ஜெபம்

என் தேவனே! நீங்கள் கருணை, அன்பு, இரக்கம், நிறைந்த தேவன் சதா காலமும் நீங்கள் என்னோடிருப்பீர்கள்.
இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்.
–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை."
(புலம்பல் 3:33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 25
சனி

## உலகில் பெற முடியாத சமாதானத்தை தேவனிடம் பெற்றுக்கொள்ளுங்கள்!

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 19 – 20

**"அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்."** (சங்கீதம் 147:14)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **இன்றைய நாள் தேவ ஆசீர்வாதங்களால் நிறைந்த நல்ல நாளாகும்படியாக வாழ்த்தி ஜெபிக்கிறேன்.** உலகில் **சுமார் 700 கோடியளவில்** வாழ்கின்ற பல்வேறு இன மனிதர்களின் வாழ்வில் **சுகத்திற்காகவும், சௌகரியத்திற்காகவும்** நவீன முறையில், பலவிதமான **கருவிகள், உணவு பதார்த்தங்கள், வைத்திய வசதிகள், கல்வி** முறைகள் ஆகியவற்றைக் கண்டு பிடித்துள்ளார்கள். ஆனாலும் இவை அனைத்திற்கும் மேலாக **அவசியமானது** மனிதனின் **உள்ளத்தை வேதனையினின்று** மீட்டுக் கொள்வதும் அவனது உள **வேதனைகளை** முற்றாக அகற்றவும் முடிந்ததான வழிகள் உண்டா? என்று தேடிப் **பார்ப்பதேயாகும்.**

தேவ பிள்ளைகளே! **உலகில்** நடைபெறுகின்றவைகளால் மனிதனது **வேதனையை** முடிவுக்கு கொண்டு வர முடியாது. அது **தற்காலிகமானது.** ஆனாலும் மனிதன் ஆவியானபடியால் அவனது **ஆவியோடு** சம்பந்தப்பட்டு அவன் உள்ளத்தின் **வேதனைகளை, துக்கங்களை,** முற்றிலுமாக அகற்றி அவனுக்கு **ஆறுதலும், சமாதானமும்** பெற்றுக் கொடுக்க முடியும். நம்மை **உருவாக்கிய** தேவனுக்கு **மாத்திரமேயாகும்.** ஏனென்றால் மனிதன் **வேதனையோடு** இருக்கும் வேளையில் இன்னுமொரு மனிதனுக்கு அல்லது **கருவிகளுக்கோ** அந்த மனிதன் **உள்ளத்தைப் புரிந்துக் கொள்ளவும்** அவரது வேதனைக்கு பரிகாரம் செய்து அவனை **மீட்டுக்** கொள்ளவும் முடியாது. ஆனால் எங்கள் **சர்வவல்லமையான** தேவனுக்கு **அனைத்தையும்** செய்ய முடியும். தேவ பிள்ளைகளே! நேற்றைய நாளில் நாங்கள் கூறிய யோனா தீர்க்கதரிசி தேவனுக்கு எவ்வளவாக **கீழ்படியாமற்** போனாரோ, அதை **கருத்திற் கொள்ளாது** அவர் **மனவேதனையுடன் துக்கத்துடன்** இருக்கும் போது தேவன் அவரை **துக்கத்திலிருந்து** மீட்க அவர் **அமர்ந்திருந்த** இடத்தில் அவரது தலைக்கு மேலாக ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டு அக்கணமே கர்த்தர் அவரை ஆறுதல்படுத்தினார். அவரது **உள்ளத்திற்கு** கர்த்தர் சந்தோஷத்தை **கொடுத்தார்.**

தேவ பிள்ளைகளே! தேவனுடைய **நோக்கம்** தேவனுடைய **சமாதானத்தை** எங்கள் **உள்ளத்திற்குள்** வைத்து எங்கள் **உள்ளத்திலிருக்கும் சுமைகளை** எங்களின்று அகற்றி நாம் தினந்தோறும் எவ்வித **சுமையுமின்றி** மிகவும் **மகிழ்ச்சியோடு** வாழ்வதைக் காணுவதேயாகும். ஆனாலும் **பெரும்பாலான** தேவ பிள்ளைகள் தேவனின் வசனங்களைக் குறித்து தாகமின்றி அவரது வெளிப்படுத்தல்களை மிகவும் **துச்சமாகக்** கணித்து யோனாவைப் போன்று தங்களின் **சுய எண்ணங்களோடு** விருப்பம் போல **தீர்மானம்** எடுக்கும் போது **வேதனைக்குள்ளாகின்றார்கள்.** நீங்கள் அவ்வாறு செயற்படாதீர்கள். **இன்றைய நாள் வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் சமாதானத்தின் தேவன். உங்கள் தேவ வசனத்தின்படி ஜீவிப்போர்க்கு உங்கள் சமாதானம் இருக்கின்றதென்பதை நான் உணர்ந்து கொண்டேன். எனக்கும் உங்கள் வசனத்திற்குள் கீழ்படிந்து வாழ உதவி செய்யுங்கள் இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"ஆ, என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருக்கும்." (ஏசாயா 48:18 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 26
ஞாயிறு

## சாபமாயிருந்த மனுக்குலத்தை இரட்சித்து ஆசீர்வதிக்கும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 21 – 22

**"...நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே சாபமாயிருந்ததுபோலவே, ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன்; பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது."** (சகரியா 8:13)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ***இன்று உங்களுக்கு ஆசீர்வாதமிக்க நல்ல நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.*** சாபமாயிருந்த எங்கள் வாழ்க்கையை ***சாபத்திலிருந்து*** விடுவித்து ஆசீர்வாதமாகுவதற்கு ***கிரியை*** செய்யும் ஜீவிக்கின்ற சிருஷ்டிப்பின் தேவன் இன்றும் எம்மோடிருப்பதனால் நாம் ***மிக அதிர்ஷ்டக்காரர்களாவோம்.***

தேவ பிள்ளைகளே! மேற்குறிப்பிட்ட பிரதான **வேத வசனத்தில்** எழுதப்பட்டுள்ளதாவது "நீங்கள் புற ஜாதிகளுக்குள்ளே ***சாபமாயிருந்தீர்கள்*** நான் உங்களை ஆசீர்வாதமாக இருக்கும்படியாக உங்களை ***மீட்டுக்*** கொண்டேன். ***பயப்படாதீர்கள்"*** என்றாகும். ஆகையால் **உள்ளம்** கலங்காதிருங்கள். மனித வாழ்வின் பின்னாலேயே தொடர்ந்து வரும் சாபத்தில் அவனைக் காப்பாற்ற அவனைப் **படைத்த பரலோகத்** தேவன் ஒருவருக்கே **இயலும்.** தேவன் ஒரே பேறான இயேசுகிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பியதும் இக்காரணத்திற்கேயாகும். ஆகையால் இரட்சகர் **இயேசு கிறிஸ்துவைக்** குறித்து அறிந்திருப்பதனால் அவரே எங்கள் இரட்சகர் என்று முழு **உள்ளத்தோடு** நாம் ஏற்றுக் கொண்டிருப்பதனால் எங்கள் வாழ்க்கையில் இருந்த எல்லா ***சாபங்களிலும்*** இருந்து நாங்கள் ***விடுதலை*** பெற்றுள்ளோம். ஆகையால் உங்கள் ***உள்ளம் கலங்காதிருப்பதாக!***

தேவ பிள்ளைகளே! ***பரிசுத்த வேதாகமத்தில் 3:13***இல் மரத்திலே தூக்கப்பட்ட எவனும் ***சபிக்கப்பட்டவன்*** என்று எழுதியிருக்கிறபடி ***கிறிஸ்து*** நமக்காக சாபமாகி ***நியாயப்பிரமாணத்தின்*** சாபத்திற்கு நம்மை ***நீங்கலாக்கி மீட்டுக்*** கொண்டார் என்று எழுதப்பட்டுள்ளது. ஏனென்றால் ***சிருஷ்டித்த*** பிதாவானவருக்கு ***கீழ்படியாமையினால்*** உலகில் அனைத்து மனிதர்களினதும் வாழ்க்கையில் **பாவங்கள்** அதிகமதிகமாக காணப்பட்டது. அவர்கள் ***சாபத்தை*** பெற்றவர்களானார்கள். ஆனாலும் மனிதர்களை அளவுக்கதிகமாக நேசிக்கின்ற **பரலோகப்** பிதா அவர்கள் ***அழிந்து*** போவதைக் காண ***விருப்பமின்றி*** தனது குமாரனை உலகிற்கு அனுப்பி அவர்களுக்காக **பலியாக** ஒப்புக்கொடுக்க ***கிரியை*** செய்தார். ஏனென்றால் **துஷ்ட** மனிதர்கள் தனது வழியில் **மனந்திரும்பி** வாழ்வதைத் தவிர அவன் ***அழிந்து*** போவதை எந்த விதத்திலும் **விரும்பாத** தேவன் இயேசுகிறிஸ்துவை ***மையப்படுத்தி*** எம்மை ***சாபத்திலிருந்து*** மீட்டு **ஆசீர்வாதம்** பெற்றவர்களாய் மாற்றினார். இன்றும் இயேசு **நம்மோடிருக்கிறார்.** உங்களுக்கு இன்று ***வெற்றிகரமான நாள்!***



ஜெபம்

என் தேவனே! தேவனே உலகில் சாபத்தில் இருந்த என்னை மீட்க உங்கள் மகனை உலகிற்கு அனுப்பியதால் ஸ்தோத்திரம். தேவனே இன்றும் நீங்கள் என்னை ஆசீர்வதியுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்."
(சங்கீதம் 32:1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 27
திங்கள்

**தேவ வசனம் உங்களை ஆசீர்வாதம் பெற்றவனாக மாற்றும்!**

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 23 – 24

**"இந்தத் தீர்க்கதரிசன வசனங்களைவாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில்எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்."** (வெளிப்படுத்தல் 1:3)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உன்னத ***ஆசீர்வாதங்களால் நிறையப் பெற்றநாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.*** மேற்கூறப்பட்ட ***பரிசுத்த வேதாகம*** வசனத்தின்படி நீங்கள் ***பாக்கியவான்கள்.*** ஏனெனின் அந்த வேத வசனத்தின்படி இன்று நீங்கள் ***தின மன்னா*** தியானங்களுக்கூடாக தேவ ***வசனத்தை*** நீங்கள் வாசிப்பதனால் அங்கே கூறப்பட்ட ***காரியங்களை*** உங்கள் வாழ்வில் நீங்கள் ***கடைப்பிடிப்பதனால் உண்மையிலேயே*** நீங்கள் ***ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவீர்கள்.***

தேவ பிள்ளைகளே! தேவன் ***வாயிலிருந்து*** புறப்படும் எந்தவொரு வார்த்தையும் ***வெறுமையாய்*** அவரிடத்திற்குத் திரும்பாது, தேவன் ***விரும்புகிறதைச்*** செய்து அதை அனுப்பி காரியங்களாகும்படி செய்யுமென ***ஏசாயா 55:11***இல் என்று எழுதப்பட்டுள்ளது. ஆகையால் ***வெளிப்படுத்தல் 1:3***இல் கூறப்பட்டுள்ளவாறு நீங்கள் தேவ வசனத்தை ***வாசித்தீர்களா? கேட்டீர்களா?*** தேவ வசனத்தில் கூறப்பட்டவைகளை உங்கள் வாழ்வில் ***கடைப்பிடிக்கின்றீர்களா?*** அப்பொழுது ***உண்மையிலேயே*** நீங்கள் அறியாமலேயே ***ஆசீர்வாதங்களைப் பெற்றவராகிவிடுவீர்கள்.*** ஆகையால் ***ஆசீர்வாதங்களைத் தேடி*** அதன் பின்னே ***பயணிக்கத்*** தேவையில்லை. தேவ வசனம் கூறுவதின்படி ***ஆசீர்வாதம்*** உங்களை நோக்கிக் ***கடந்து வந்து*** உங்கள் வாழ்வில் ***தங்குகின்றது.***

தேவ பிள்ளைகளே! ***உள்ளம் கலங்காதிருங்கள்!*** வேதாகமத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு வசனத்தையும் உங்கள் ***முழு உள்ளத்தோடு விசுவாசியுங்கள்.*** அவை அனைத்தும் தேவ ***ஆவியானவரின் ஏவுதலின்*** பேரில் எழுதப்பட்டவைகளாகும். ஆகையால் நீங்கள் ***தினந்தோறும்*** தேவ வசனத்தை ***வாசிக்கவும்*** அதை ***தியானிக்கவும்*** பழகுங்கள். அப்படியே தேவ வசனத்தின்படி வாழ எவ்வேளையிலும் ***முயற்சி*** செய்யுங்கள். பரிசுத்த வேதாகமத்தில் ***உபாகமம் 28வது அதிகாரத்தில் 1முதல் 14வரை*** வாசித்து எழுதப்பட்டுள்ள ***ஆசீர்வாதங்கள்*** அனைத்தும் இன்றும் நடைமுறையில் பெற்றுக் கொண்டிருக்கிறோம். தேவனின் ஆசீர்வாதம் எமக்கு ஐசுவரியத்தைத் தரும் என்று ***நீதிமொழிகள் 10:22***இல் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் நீங்கள் பெறுகின்ற ஆசீர்வாதங்கள் உங்கள் வாழ்க்கையில் எல்லா வழிகளிலும் **வெற்றியைக்** கொடுக்கும் இன்று **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் தேவ வசனத்தில் என்னை ஆசீர்வதிப்பதை இன்று தெரிந்துக் கொண்டேன். அதைக் கேட்டு அவைகளை வாழ்க்கையில் நடைமுறையில் கடைப்பிடித்துச் செல்ல எனக்கு உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்." (சங்கீதம் 1:3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி 28
செவ்வாய்

எம்மைத் தாயின் கர்ப்பத்தில்
உருவாக்கிய நாள்
முதல் வாழ்வில்
துணையாக இருப்பவர்!

இன்றைய
வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 25 – 26

**"உன்னை உண்டாக்கினவரும், தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவரும், உனக்குத் துணைசெய்கிறவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: "** (ஏசாயா 44:2)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ***இன்றைய நாளில் நலம் பெற்று, மகிழ்ச்சிகரமாய் சமாதானமாய் வாழும்படி வாழ்த்துகின்றேன்.*** ஒவ்வொரு நாள் காலையிலும் போல ***வழமையாக*** இன்றைய நாளிலும் மிகவும் மும்முரமாக ***கடமைகளில்*** ஈடுபட்டு இருக்கின்றீர்கள் என்று நினைக்கின்றேன். ஆனாலும் எல்லா மனிதருக்கும் அவர்களது ***மாமிச சரீரம்*** காரணமாக ***கடினமான*** கடமைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறதென்பதை நான் அறிவேன். இவ்வுலகில் ***வாழ்வதற்கான*** தேவைகளின் காரணமாக மனிதர்கள் மிகவும் ***கஷ்டப்பட்டு உழைக்கின்றார்கள்.*** ஆனாலும் அவர்கள் ஆத்துமாவைக் குறித்தும், ***ஆத்துமா சம்பந்தமான*** காரியங்களைக் குறித்தும், அவ்வளவாக ***அக்கறையுடன்*** எவரும் ***செயல்படுவதில்லை.***

தேவ பிள்ளைகளே! ஆனாலும் நீங்கள் அவ்வாறன்றி பூமிக்குரியவைகளைப் போலவே ***ஆவிக்குரியவைகளிலும்*** முன்னேற்றமடைவது ***மிக அவசியம்*** ஆகும். ஆகையால் நீங்கள் இந்த பூமிக்குரியவைகளில் மாத்திரம் ***ஈடுபாடு*** கொண்டு அதைச் ***சார்ந்துக்*** கொள்ளாதீர்கள். ஏனெனில் நீங்கள் தேவனுக்குச் ***சொந்தமான*** பிள்ளையாக இருப்பதனால் நீங்கள் தேவனோடு ***நெருங்கி*** கிட்டிச் சேர்ந்து வாழ்வதே மிக அவசியமாகின்றது. இன்றைய நாளில் மேற்கூறிய வேதாகம வசனமாகிய ***ஏசாயா 44:2***இல் கூறப்படுகின்றதாவது எங்களை தாயின் ***கர்ப்பத்தில்*** உருவாக்கினவரும் உனக்குத் ***துணை*** செய்கிறவருமான தேவபிதா, எங்களுக்கு ***ஒத்தாசை*** புரிகிறவருமான தேவன் என்றாகும். ஆகையால் நீங்கள் ***கலங்காதிருங்கள்!*** பரலோகத்தில் ***வாசம் பண்ணும்*** தேவன் இப்பூலோகத்தில் ***வாழும்*** உங்களுக்கு ஒத்தாசை செய்ய வருவதெப்படி? என ஒரு ***எண்ணம் வரக்கூடும்.*** இல்லாவிட்டால் நீங்கள் ***முகங் கொடுக்க*** வேண்டிய ***பிரச்சினைகள், உபத்திரவங்கள்*** காரணமாக எனக்கென்றால் தேவனை ***விசுவாசத்தோடு*** பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவ்வளவாக என் வாழ்க்கையில் ***பிரச்சினைகள், துன்பங்கள்,*** என்னை நெருக்கிக் கொண்டிருக்கின்றன, என்று நினைக்கலாம். ஆனால் நீங்கள் இவ்வுலகில் பிறக்கும் போது ஒன்றும் அறிந்திருக்கவில்லை. நீங்கள் அறிந்திருந்தது உங்களுக்கு ***பசி*** வருகின்ற வேளை ***அழுவதற்கு*** மாத்திரமேயாகும்.

தேவ பிள்ளைகளே! உங்கள் தாயின் சரீரத்தின் ***இரத்தத்தை தாய்ப்பாலாக*** மாறச் செய்து உங்கள் ***பசியைப்*** போக்க கிரியை செய்த உங்கள் ***சிருஷ்டிப்பின்*** பரலோகப் பிதாவுக்கு உங்களைப் ***பராமரிக்க*** முடியாது, உதவி செய்ய முடியாது, என்று நீங்கள் நினைப்பது ஏன்? இன்றும் தேவன் உங்களோடிருந்து உங்களின் சகல காரணங்களினாலும் உங்களுக்கு ***ஒத்தாசை*** செய்வாராக. உங்களுக்கு ***வெற்றிகரமான நாள்.***



ஜெபம்

என் தேவனே! நீங்கள் எனக்கு ஒத்தாசை செய்கின்ற தேவன். நான் மனிதர்களை விசுவாசிக்காமல் உங்களை முழு உள்ளத்தோடு விசுவாசிக்கின்றேன். என்னுடைய வாழ்வில் அனைத்து காரியங்களையும் உமக்கு ஒப்புக் கொடுக்கின்றேன். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"...உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழேபூமியிலும் தேவனானவர்."
(யோசுவா 2:11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 29
புதன்

**துயரத்தித்திற்கு பதிலாக ஆனந்த தைலத்தால் அபிஷேகிக்கும் தேவன்!**

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 27 – 28

**"...சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும்..."** (ஏசாயா 61:3)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **இன்றைய நாளில் உங்களுக்கு மிகவும் ஆறுதலான நாளாகுக என வாழ்த்துகின்றேன்.** அத்தோடு பிரார்த்திக்கின்றேன். உலகில் வைத்திய **பரிகாரத்திற்கூடாக** மனிதனது **சரீரத்திற்கு** சுகத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும். ஆனால் மனிதனது ஆத்துமாவுக்கு அத்தோடு **பிரச்சினை, துன்பம், உபத்திரவம்,** ஆகியவைகள் காரணமாக மனிதனது உடைந்த உள்ளத்தை சுகப்படுத்த இயலாது என்பதை நீங்களும் நானும் நன்றாக **அறிந்துள்ளோம்.** ஆனாலும் உங்கள் **சிருஷ்டிப்பின்** ஜீவிக்கின்ற **தேவபிதா** அவரது குமாரனை **இயேசுகிறிஸ்துவுக்கூடாக** எங்கள் **சரீரத்தை** மாத்திரமல்ல எங்கள் **ஆத்துமாவையும் நொறுங்குண்ட உள்ளத்தையும்** சுகப்படுத்துவாராக!

தேவ பிள்ளைகளே! மிகவும் **ஏழை** குடும்பத்தில் **பிறந்து** சிறுவயது முதல் **வறுமையின்** மத்தியில் **வளர்ந்தேன்.** மேல் படிப்பு தொடரும் அளவிற்கு படிப்பில் **திறமையற்றிருந்த** நான் **வாலிபப் பருவத்தில்** கால்வைக்கும் போது **வேலையொன்றுக்கு** சேர்ந்தேன். அதற்கிடையில் **கேஸ்ட்ரிக்** வியாதியில் **11 வருடக்காலம்** வேதனைப்பட்டேன். நான் திருமணம் முடித்து 1½ வருட காலமாக **குழந்தை செல்வ** ஆசீர்வாதமின்றி **உள்ளத்தில் மிகக் கவலையோடு** இருந்தேன். அதுமாத்திரமின்றி பொருளாதார **நெருக்கடிகளும்** இருந்தமையால் மிகுந்த **மனக்கலக்கத்தோடு** வாழ்ந்தேன். ஆனால் எனது **சிருஷ்டிப்பின்** பிதாவான இயேசுகிறிஸ்து தன்னருகில் என்னை அழைத்து என்னுடைய நோயை **சுகப்படுத்தி** 1½ வருடத்திற்குப் பிறகு எங்களுக்கு குழந்தைப் **பாக்கியத்தையும் ஆசீர்வதித்து** என் வாழ்விலிருந்த எல்லா **துன்பங்களையும்** நீக்கி அவரது ஆனந்தமெனும் **தைலத்தால்** என்னை **அபிஷேகித்தார்.**

தேவ பிள்ளைகளே! **நீங்கள் கலங்காதிருங்கள்!** எங்கள் **சிருஷ்டிப்பின்** தேவ பிதாவானவர் எனக்கு மாத்திரமின்றி அவரின் **அழைப்பைப்** பெற்று அவரை **முழு உள்ளத்தோடு** ஏற்றுக் கொள்ளும் **அனைவருக்கும்** எனக்குப் போன்றும் எனக்கும் மேலதிகமாக ஆசீர்வதிக்க **வல்லமையுடையவர்** எமது **கண்ணீரைத் துடைக்க** தேவன் இன்றைய நாளிலும் ஆயத்தமாக இருக்கின்றார். எமது வாழ்வில் **கண்ணீர்** விடாதபடி உன் **கண்களைக்** காத்துக் கொள் எனக் கர்த்தர் சொல்லுகிறார். உன் **கிரியைக்கு** பலன் உண்டென்று **கர்த்தர்** கூறுகின்றார். உங்கள் எல்லாத் **துயரங்களையும்** தேவன் உங்கள் வாழ்வில் அகற்றி அவர் உங்களை **சந்தோஷத்தால்** நிரப்புவார். இன்று **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! என் வாழ்வில் இருந்த எல்லா புலம்பல்களையும் நீங்கள் அகற்றிப் போட்டு நீங்கள் என்னை சந்தோஷ தைலத்தால் அபிஷேகியுங்கள் அதற்கு விரோதமான சத்துருவின் தடைகளை அகற்றிப் போடுவீர்களாக.
இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"...நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்" (எரேமியா 31:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா
ஜனவரி 30
வியாழன்

## நீங்கள் சேனைகளின் கர்த்தரின் சுவிகாரப் புத்திரர்கள்!


இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 29 – 30

"...அப்பொழுது தகனபலியும் சர்வாங்க தகனபலியுமாகிய நீதியின் பலிகளில் பிரியப்படுவீர்; அப்பொழுது உமது பீடத்தின்மேல் காளைகளைப் பலியிடுவார்கள்." (எரேமியா 51:19)

அன்புக்குரிய தேவபிள்ளைகளே! **சதாகாலங்களிலும்** ஜீவனுள்ளவராக எம்மோடிருக்கும் ஒரே தேவன் **இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் இன்றும் ஆசீர்வாதத்தின் நாளாக அமையுமாறு பிரார்த்திக்கின்றேன்.** இஸ்ரவேலின் தேவனும் சேனைகளின் கர்த்தருமானவர் எம் தேவனாக இருப்பதால் நாங்கள் **ஆசீர்வதிக்கப்பட்டவர்களும், பாக்கியவான்களுமாயிருக்கிறோம்.**

தேவ பிள்ளைகளே! கர்த்தரை தங்களுக்குத் **தெய்வமாகக்** கொண்ட ஜாதியும் அவர் தமக்குச் **சுதந்திரமாகக்** தெரிந்துக் கொண்ட **ஜனமும் பாக்கியமுள்ளது** என்று தேவ வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அத்தோடு சங்கீதம் 112:1,2ல் கர்த்தருக்கு பயந்து அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனிதன் பாக்கியவான் என்பதாக எழுதப்பட்டுள்ளது. ஆகையால் உங்கள் **இருதயம் கலங்காதிருப்பதாக! இஸ்ரவேலின்** தெய்வம் உங்கள் **இரட்சகராகிய** தேவன். ஏனெனில் உன் **இரட்சகராயிருக்கிற** உன் தேவனாகிய கர்த்தர் நான் இஸ்ரவேலின் **பரிசுத்தரும்** என **ஏசாயா 43:3**இல் எழுதப்பட்டுள்ளது. இத் தேவன் எல்லா ஜாதிகளுக்கும் **படைப்பின்** தேவனானவர். ஆயினும் **இம்மண்ணில்** வாழும் சகல **ஜாதிகளிலும்** தனது **சொந்த ஜனமாக** இஸ்ரவேல் **வம்சத்தைத்** தெரிந்துக்கொண்டார். ஆகையால் நீங்கள் இஸ்ரவேல் **இனத்தைச்** சேர்ந்தவர் அல்லவா? இஸ்ரவேலின் தேவன் அவருடைய **சொந்த ஜனமாக** மாறும்படி உங்களைத் **தெரிந்துக்கொண்டு** தம்மிடமாக உங்களை அழைத்துக் கொண்டபடியால் இப்போது நீங்கள் ஆத்மீக **இஸ்ரவேல்** எனப்படுவீர்கள்.

தேவ பிள்ளைகளே! உங்களை **ஆத்மீக** இஸ்ரவேலராக **தெரிந்துக் கொள்ளப்பட்டு** அவருடைய சுவீகாரப் புத்திரர்களாக மாறியபடியால் எல்லா ஜாதிகளிடத்திலும் **அதிரஷ்டசாலிகள்** ஆவீர்கள். ஏனெனில் கர்த்தராகிய தேவன் இஸ்ரவேல் ஜனங்களை **அடிமைத்தனத்திலிருந்து** விடுவித்து நலமும் **விசாலமுமான** இடத்திற்கு கொண்டு போய் அவர்களை ஆசீர்வதித்து போல சாத்தான் வைத்துள்ள எல்லா **அடிமைத்தனங்களில் மீட்டு** உங்களை **விடுவித்து** உங்கள் வாழ்க்கையை **இயேசுகிறிஸ்து ஆசீர்வாதமாக** மாற்றுவார். இன்று நீங்கள் இருக்கும் நிலமையைக் குறித்து **பயப்படாதீர்கள்.** நீங்கள் அவரின் **சொத்தாக** இருப்பதாலும் நீங்கள் தேவனின் சுவீகாரப் **புத்திரராக உரிமையைப்** பெற்றுக் கொண்டபடியால் பரலோகத்தின் சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ள **உரிமையுள்ளவராயிருக்கிறீர்கள்.** உங்களுக்கு **இன்று ஆசீர்வாதத்தின், வெற்றியின் நாள்!**


ஜெபம்

என் அன்புத் தகப்பனே! நீங்கள் இஸ்ரவேலின் தேவன். நீங்கள் என்னை தெரிந்துக் கொண்டபடியால் நீங்களே என் தேவனாக இருக்கிறீர்கள். அன்புத் தகப்பனே! நீங்கள் என்னைத் தெரிந்துக் கொண்டு சொந்தமாக்கிக் கொண்டபடியால் நன்றி. இயேசுகிறிஸ்துவின்

வேத வாக்குத்தத்தம்

"நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்." (ரோமர் 8:17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜீவ மன்னா

ஜனவரி 31 வெள்ளி

## தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்!

இன்றைய வேதவாசிப்பு
சங்கீதம் அதி: 31 – 32

**"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்."** (1 யோவான் 5:4)

அன்புக்குரிய தேவ ஜனங்களே! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை **வாழ்த்தி வரவேற்கிறேன்.** நீங்கள் இந்த **உலகத்தை ஜெயங் கொள்ள பிறந்தவர்கள். ஜெயக்கிறிஸ்துவின்** குடும்பத்தில் நீங்கள் பிறந்திருக்கின்றீர்கள். **உயர்ந்து** உன்னதத்திற்குச் செல்லும்படியாக இயேசுகிறிஸ்துவினால் அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள். நீங்கள் **ஜெயங்** கொண்டு பரலோகத்தில் **பரிசுத்தவான்கள்** கூட்டத்தில் இருக்க வேண்டும். இதுவே கர்த்தரின் உங்களைக் குறித்த நோக்கமும் **திட்டமுமாகும்.** இவ்வுலக வாழ்வில் நீங்கள் **வழுவாதபடி** தேவன் **அனுதினமும்** உங்களை **பாதுகாத்து** வருகின்றார். தேவ பிள்ளைகளே! தேவன் இப்படியாக உங்களைக் குறித்து **எண்ணுவதால்** நீங்கள் எப்போதும் கலங்கத் தேவையில்லை. மறுபடியும் **பிறந்த** நீங்கள் தேவனுக்கு தகுந்த வாழ்க்கையை **ஜீவிக்க வேண்டுமெனவே** அவர் எமக்கு முன்பாக வாழ்ந்து **காட்டியிருக்கிறார்.**

எங்களது **தின மன்னா தியானங்கள்** தினமும் உங்கள் வாழ்விற்கான ஆத்தும போசனையை தருகின்றது. நீங்கள் **வேதவசனத்தை வாசிக்கிறவர்களாக** மாத்திரம் அல்லாது அதன்படி **செயல்படுகிறவர்களாகவும்** இருங்கள். இயேசுவின் வார்த்தைகளின்படி எமது வாழ்வை அமைத்துக் கொண்டு செல்லுகின்ற நாம் **கடந்து** வந்த பாதையை **நோக்கும்** போது நாம் இவ்வளவு தூரம் கடந்து வந்தோமா என **எண்ணத்** தோன்றும். ஏனெனில் **முட்கள்** நிறைந்த இடங்களில் **சேற்றுக் குழிகளில், கற்களில் இடறாத வண்ணம் இயேசு எம்மைத் தூக்கி** வந்துள்ளார். நாங்கள் எவ்வளவாக **ஜெயங்** கொள்ளும்படி விரும்புகிறோமோ அதைவிட கர்த்தர் உங்களை **ஜெயங்** கொண்டவர்களாய் நிறுத்தும்படி அதிக **வைராக்கியமுடையவராயிருக்கின்றார்.** சில காரியங்கள் எமது வாழ்வில் **தோல்வியாய்** இருக்கலாம். நாம் **நினைத்தவைகள், நினைக்கிறவைகள்** நடைபெறாது போகலாம். **சாத்தான்** அவைகளுக்கூடாக எமது தோல்வியையே **ஞாபகப்படுத்திக்** கொண்டிருக்கலாம். ஆனால் உங்கள் **பரமபிதாவுக்கு** உங்கள் **தோல்வியை** தாங்கிக் கொள்ள முடிவதில்லை. அவர் உங்கள் **தோல்விகளை ஜெயமாய்** மாறப்பண்ண வைராக்கியம் கொண்டிருக்கிறார். ஆகையால் **நாட்கள்** கடந்தாலும் தேவன் ஏற்ற வேளையில் உங்களுக்கு வெற்றியைக் கொடுத்து **உயர்த்தும்படியாய்** செயல்படுவார். அதுவரை **பொறுமையோடு ஜெபத்தை** மாத்திரம் தவறாது ஏறெடுங்கள்.

தேவனுடைய பிள்ளைகளே! நீங்கள் **தோல்வியுற்ற** இடத்தில் நின்று கொண்டிருக்கலாம். நாம் **தோல்வியுற்ற** காரியங்களை எமது வாழ்வில் கண்டு பிடித்து **சாத்தானுக்கு** விரோதமாக கர்த்தருடைய **ஒத்தாசையோடு ஜெயத்தை சுதந்தரித்துக்** கொள்ளும்படியாக எழுந்திருங்கள். **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

தேவனே! உங்களில் பிறப்பதெல்லாம் உலகை ஜெயிக்குமென உங்கள் வசனத்திற் கூடாக அறிந்துக் கொண்டேன். தோல்விகளை எண்ணி துவண்டு போகாமல், எழுந்து ஜெபத்தில் தரித்திருந்து சகலவற்றிலும் ஜெயம் பெறும்படியாக எனக்கு உமது ஒத்தாசையைத் தாரும். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"சத்தியத்தினிமித்தமும், நீதியுடன் கூடிய சாந்தத்தினிமித்தமும், உமது மகத்துவத்திலே ஜெயமாக ஏறிவாரும்; உமது வலதுகரம் பயங்கரமானவைகளை உமக்கு விளங்கப்பண்ணும்." (சங்கீதம் 45:4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இயேசுவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அன்பார்ந்தவர்களே! புதிய வருடத்தில் தேவ இராஜ்ஜியத்தின் சுவிஷேச வளர்ச்சிக்காக நீங்களும் பங்காளராகலாம்.எங்கள் சுகமளிக்கும் ஆராதனை காலை 10 மணிமுதல் இறுதிவரை இணைய தளத்தில் நேரடியாக ஒளிபரப்பாகின்றது. இப்பொழுதும் வெளி நாடுகளிலிருந்து வெளி நாட்டவர்கள் வந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. குவைட், இத்தாலி, அவுஸ்ரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் வசிக்கின்ற வெளி நாட்டவர்கள் இந்த நேரடி ஒளிப்பரப்பைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற வேளை இறுதி ஜெபத்தின் போது திரையில் கை வைத்து சுகத்தைப் பெற்றுக் கொள்வதோடு இயேசுகிறிஸ்து தங்களை குணமாக்கியதை எமக்கு சாட்சியாக அறிவிக்கின்றார்கள்.

தேவ பிள்ளைகளே! இவ் வருட ஆரம்பத்தில் தேவனுக்கென்று எந்த ஒரு ஊழியமும் செய்யாதிருக்கின்றீர்களா? நீங்கள் அறிந்தவர்களுக்கு இந்த ஒளிபரப்பை அறிமுகப்படுத்துவதோடு, எமது தின மன்னா தியானங்களையும் புதியவர்களுக்கு அறிமுகப்படுத்தி இந்த வருடத்தில் தேவனுக்கென்று ஒரு புதிய ஊழியத்தினை ஆரம்பிக்க முடியும். இவ் வருடத்தில் நீங்கள் ஆத்மீக வாழ்விலும், லௌகீக வாழ்விலும், வளம் பெற்று வாழ்வீர்களாக!









வெப் ஒளிபரப்பின் மூலம் எங்களுடைய நிகழ்ச்சியினை நேரடியாக வீட்டிலிருந்தே காண, எங்களுடைய www.jesusnf.org இணையத்தளத்திற்குள் பிரவேசித்து On Live பக்கத்தை க்ளிக் செய்யவும். இன்னுமாக Android (Phone/Tab) Apple (ios), iPhone, iPad இலகுவான கருவிகளின் மூலமாக நேரடியாக தொடர்பு கொள்ள முடியும். தொடர்பு கொள்ள Ustream எப்ளிகேஷனை டவுன்லோட் செய்து jesusneverfails 'சர்ச்' (Search) பண்ணவும்.

## தின மன்னாவை வெளியிட பண உதவி ... பிரான்ஸிலிருந்து...



அன்பார்ந்தவர்களே! ஜனவரி மாத தின மன்னா தியானங்களை வெளியிட பிரான்ஸ் நாட்டிலிருக்கும் எங்கள் ஆவிக்குரிய சகோதரரான ரொஹான் தேவையான பணத்தைத் தந்து அதிவிஷேடமான காரியத்தைச் செய்தார். இந்த சிறியவர்களுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள். என்று இயேசுகிறிஸ்து கூறியிருக்கின்றார். தேவ பிள்ளைகளே! மேற்கூறிய தேவ வசனத்தின்படி தேவனின் இந்த உன்னத காரியத்திற்கு பங்குதாரராக அவர் செய்தது எனக்கும் என்னுடைய சபைக்கும் அல்ல, இயேசுகிறிஸ்துவுக்கேயாகும். ஆகையால் இந்த சகோதரனையும், அவரது குடும்பத்தையும் பரி.மத்தேயு 10:42இன்படி தேவன் நிறைவாக ஆசீர்வதிப்பார் என்பதில் எவ்வித சந்தேகமில்லை.

இதை வாசிக்கின்ற வாசகர்கள் நீங்கள் யாராக இருப்பினும் (இலங்கையர், பிறநாட்டவர்) இந்த ஜீவ மன்னாவின் முழு செலவு அல்லது ஒரு பங்கு பொறுப்பெடுத்து செய்வீர்களாயின் அது உங்களுக்கு அளப்பரிய ஆசீர்வாதமாகும். எதிர்வரும் மாதங்களில் பங்குதாரர் யாருமில்லையாகையால் உங்களுக்கும் இவ்வண்ணமாக பங்குதாரர்களாக முடியும். இது சம்பந்தமாக அட்டைப் படத்தின் பின் புறமுள்ள எங்கள் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

**உங்களுக்கு தேவனுடைய சகல ஆசீர்வாதங்களும் நிறைந்த இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயமானது புதிய ஆண்டு 2014

- ★ அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும். உபாகமம் 11:12
- ★ நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே. கலாத்தியர் 4:10
- ★ பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது; அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார். ஆதியாகமம் 1:14
- ★ அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். தானியேல் 2:21
- ★ மனுஷன் புசித்துக் குடித்து, தன் பிரயாசத்தின் பலனை அநுபவிப்பதைப் பார்க்கிலும், அவனுக்கு ஒரு நன்மையும் இல்லை; இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது என்று நான் கண்டேன். பிரசங்கி 2:24
- ★ அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார். சங்கீதம் 147:14
- ★ பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை. சங்கீதம் 121:6
- ★ வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது. சங்கீதம் 65:11
- ★ ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும். 1 நாளாகமம் 29:12

**அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அடையும்படி தொடர்ந்து போவோம்; அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது; அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார். ஓசியா 6:3**

## இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக!!!



28 வது வெளியீடு

போதகர் ஏ.ஜே.ஜோசப்


ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம். விலாசத்தை அனுப்பவும்

R/N:- CME/003/12/NPO



**இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்**

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.

☎ 011-2334865 0714-922929

arulandu.joseph@gmail.com www.jesusnf.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நியூஸ் பிரிண்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.